# செந்தமிழ்

தொகுதி-76 டிசம்பர்' 82 பகுதி-4

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்தும்

## தமிழ் இலக்கிய இதழ்

ஆசிரியர் : டி. பி. எம். பெரியசுவாமி

# செந்தமிழ்

தொகுதி-76 டிசம்பர் 1982 பகுதி-4

## உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | புதிய குறள் — கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | ...154 |
| 2. | சத்துருக்கன் பாத்திரப்படைப்பு — ஓர் ஆய்வு ம.மதியழகன் M.A.M.phil | —157 |
| 3. | இராமாயணக் கும்மி ச.சுபாஷ் சந்திரபோஸ் | ...162 |
| 4. | அறிவியல் விந்தை —அசாமி | ...165 |
| 5. | விடுதலையா? டாக்டர் தே. ஆண்டியப்பன் | ...167 |
| 6. | அமெரிக்காவில் அனைத்துலக ஒப்பிலக்கிய மாநாடு —டாக்டர் வை. சச்சிதானந்தன், M.A., ph, D | ...174 |
| 7. | டில்லிப் பயணம் —பழனி அரங்கசாமி | ...180 |
| 8. | அரையர் சேர்வை டாக்டர் சு. வேங்கடராமன் | ...189 |

# புதிய குறள்

பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்.

## இன்பத்துப் பால்

### காட்சி

கண்டனன்பல் பூமருவிக் கானார் கவின்மேவிக்
கொண்டிடுமிளி ரின்பக் கொடி.

### ஐயம்

வானோர் மகள்கொல் மலிநீ ருலகினிடை
ஏனோர் மகள்கொ லிவள். 84

### தெளிவு

கான்மலர் வாடிடக் கண்டே னிவண்மக்கட்
பான்மக ளாதல் படும். 85

### நயப்பு

வண்டீ ருரையினிவள் வாய்போன் மணக்குமவர்
கண்டீ ரெனினெற் கலந்து. 86

### அருமையறிதல்

நனவே யவர்சூழ்ந்து நாடுவா ரென்னிற்
கனவே யிவடன் கலப்பு. 87

### கழற்று

பெண்ணிற் கிழந்தேன் பெருநல மென்பாயிஃ
தெண்ணிற் கியைந்த திலை. 88

### தலைவனை வியத்தல்

இவட்கண் டவண்வந் தியலுரைத்த வண்ணல்
நிவப்பினுக் கில்லை நிகர். 89

### மான் வினாதல்

ஒருமா னிவணுற்ற துண்டோ வுரைமின்
கருமான் கணையிற் கலந்து. 90

### இருவர் நினைவு மொருவழி யுணர்தல்

எண்ணினொரு மானு மிவருளத்தி னில்லையிவர்
கண்ணி னுரைப்பர் கருத்து. 91

### சுனையாடல்

விழி சிவப்ப வாய்விளர்ப்ப வேயு மலர்கொல்
சுழிகரப்ப வாடு சுனை, 92

### மடற்றிறம்

கடலேறு வேட்கை கலப்பிற் பனையின்
மடலேறு வார்பலர் மன். 93

### தழைவிருப்புரைத்தல்

மிலையாள் பெருவேட்கை மீக்கொண்டுஊரான்
தலைவநீ தந்த தழை 94

### காப்புடைத்தென்று கழறல்

காப்புடைத் தையநீ காதலி னஞ்சாமல்
ஏப்படைத் தெய்து மிடம். 95

### இருபொழுதும் வரவகற்றல்

இரவும் பகலு மினிவார லைய
கரவு தெரிக்குங் களவு. 96

### புனறரு புணர்ச்சி

வையைப் புனலீர்ப்ப வந்தருளினா னொருவன்
உய்ய லறியா வழி. 97

### அலரறிவுறுத்தல்

தெருள்மன்னு மின்பத்துத் தோராது செய்த
அருள்மன்னு மாயிற் றலர். 98

### உடன் போக்குணர்த்தல்

மடன்போத லில்லா மரபுடையாட்கின்
றுடன் போக வேண்ட லுணர்த்து. 99

### வரைவு வேண்டல்

களவார்ந்து நின்ற கருத்தொழித்தெம் பொன்னைக்
கொளல் வேண்டி னீவரைந்து கொள். 100

### மகன் வாயிலாதல்

புகக்கண்டு மற்றிவனைப் புல்லி மகிழ்தல்
மகக்கொண்டு வந்த பயன். 101

### புலவி

அழல்போல் புலவியமையாதெனி னொர்
நிழல்போலு மின்ப நிலை. 102

### புலவி நுணுக்கம்

நின்னிற் பிரியே னெனநின் றழன்றிட்டாள்
என்னிற் பிரியா யென. 103

யாது முரையா திருந்தேனிகன் றனளோர்
மாது நினைந்தீ ரென. 104

### புலவிச் சிறப்பு

கலவி யனைத்துங் கருதின் சிறந்த
புலவியி னைந்தும் புகும். 105

முற்றும்

# சத்துருக்கன்

## பாத்திரப் படைப்பு - ஓர் ஆய்வு

- ம. மதியழகன் M.A., M. Phil.,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

கம்பன் பெருமையைச் சாற்றுவதில்பாத்திரப் படைப்பு முதன்மை பெறுகின்றது. கம்பன் காவியத்தில் பல்வேறு பாத்திரங்கள் இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று தசரதன் மகனும் இராமனின் இளவலுமாகிய சத்துருக்கனின் பாத்திரப் படைப்பு,

கம்பனின் பரந்துபட்ட காவியத்தில் சத்துருக்கன் வருமிடங்கள் சிலவே. அதிலும் அவன் பேசுமிடங்கள் மிகச்சிலவே. பாலகாண்டத்துத் திருவவதாரப் படலத்தில் இவன் பிறக்கும் போது வசிட்டரால் பெயர் சூட்டப்பெறுகிறான். அயோத்தியா காண்டத்துப் பள்ளியடைப் படலத்தில் கேகய நாட்டிலிருந்து பரதனுடன் வரும்போது ஓரிரு வார்த்தைகள் பேசுகின்றான். அதே காண்டத்துக் கங்கைகாண் படலத்தில் பரதனுடன் இராமனைக் காணச் செல்லும் வழியில் குகனைக் காண்கிறான். இறுதியாக யுத்த காண்டத்து மீட்சிப் படலத்தில் தீக்குளிக்க எண்ணிய பரதன் சத்துருக்கனனை ஆட்சி செய்யும்படி ஏவுமிடத்தில் சத்துருக்கன் பேசுகின்றான்[1]. எனவே காவியத்தில் சத்துருக்கன் தோன்றுமிடங்கள் நான்கு என்பதும், பேசுமிடங்கள் இரண்டு என்பதும் தெளிவாகின்றன.

சத்துருக்கனின் பாத்திரச் சிறப்பை ஆராயுமுன், பாத்திரங்களின் பொதுவான அமைப்பு முறைகளைக் காணல்நலம். காவியத்தில் தலைமைப் பாத்திரங்கள், கதைக்கு ஆக்கந்தரும் பாத்திரங்கள், கதையை நடத்திச் செல்லும் பாத்திரங்கள், சிறுபாத்திரங்கள் என நான்கு வகைப் பாத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

தலைமைப் பாத்திரங்களாவன கதையை நடத்திச் செல்வதும், கதைக்கு ஆக்கம் தருவதும் மட்டுமல்லாமல் கதைக்கே காரணமாக இருக்கக் கூடியவை. இராமன், சீதை, இராவணன் போன்ற பாத்திரங்கள் இவ்வகையைச் சார்ந்தன.

கதையை நடத்திச் செல்லும் பாத்திரங்களாவன கதைக்குத் திருப்பங்களையும், மாற்றங்களையும் ஏற்படுத்தக் கூடியன. அவை

சிறு பாத்திரங்களாகவும் அமையலாம். கைகேயி, கூனி, சூர்ப்பனகை போன்ற பாத்திரங்கள் இவ்வகையைச் சார்ந்தன.

கதைக்கு ஆக்கந்தரும் பாத்திரங்களாவன தலைமைப் பாத்திரங்களுக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தகும் அளவிற்குப் பண்பாலும், செய்கையாலும் உயர்ந்து நிற்பவை. அவை காப்பியத்தில் திருப்பத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. கும்பகருணன், வீடணன், வாலி போன்றவர்கள் இந்நிலையினர். இத்தகு பாத்திரங்கள் இல்லாமல்கூட கதை சொல்லலாம்; ஆனால் காப்பிய நிகழ்ச்சிகளுக்கு ஆக்கந்தந்து இன்றியமையாதனவாக அமைந்திருக்கக் கூடியவை.

இந்த மூன்று வகையிலும் அடங்காது அப்போது தோன்றி உடனே மறையும் பாத்திரங்கள் சிறுபாத்திரங்கள். கரன், தாடகை சனகன், சுமத்திரை, சவரி போன்றன.

இப்பொழுது, சத்துருக்கனைச் சந்தித்து ஆய்வினைத் தொடங்வோம். மிகப்பெரிய காவியத்தில் ஓரிரு இடங்களிலேயே வருவதால் சத்துருக்கன் தலைமைப் பாத்திரமல்ல. கதையை நடத்திச் செல்லும் பாத்திரமாக அமைந்துள்ளானா என்று நோக்கினால் அவ்வாறும் அமையவில்லை.

''முத்துஉருக் கொண்டுசெம் முளரி அலர்ந்தால்
ஒத்திருக்கும் எழிலுடைய இவ்வொளியால்
எத்திருக்கும் கெடும் என்பதை எண்ணாச்
சத்துருக்கன்எனச்சாற்றினன் நாமம்''-திருவவதாரப் படலம்

எனப் பெயரிடுகின்றார்வசிட்டர். இராமனும் இலக்குவனும்இணைந்து விளையாடி வளர்தல் போலப் பரதனும் சத்துருக்கனும் இணைந்து வளர்கின்றனர்.

கைகேயியின் வரத்தால் இராமன் காட்டிற்குப் போனபின்பு, கேகய நாட்டிற்குச் சென்ற பரத சத்துருக்கனர்க்கு அழைப்பு அனுப்பப்படுகிறது. அழைப்பைக் கண்டு பரத சத்துருக்கனர் அயோத்தி நோக்கி வருகின்றனர். அயோத்திக்குள் நுழைந்ததும் அந்நகர் இருக்கும் அவலநிலை கண்டு பரதன் ஐயுறுகின்றான். தன்னுடன் வரும் சத்துருக்கனிடம் காரணம் கேட்க,

"... ...... ... ...எய்தியது
ஒருவகைத்தன்று உறுதுயர் ; ஊழிவாழ்
திருநகரத்திரு தீர்ந்தனள்"- —பள்ளியடைப் படலம்

என்று பதில் கூறுகின்றான்.

இக்கூற்றைக் கொண்டு, அயோத்தி நகர் நிலை கண்டு ஏதோவொரு அவலம் நிகழ்ந்துள்ளது என்பதை ஊகித்துக் கூறுகின்ற அளவிற்குத் திறம்படைத்துள்ளான் சத்துருக்கன் என்பதைத் தவிர சிறப்பாக அறியக்கூடியது வேறொன்றுமில்லை.

அயோத்தி அரண்மனைக்கு அடிவைத்த பரத சத்துருக்கனர் தசரதன் தன்னுயிர் நீத்ததை அறிகின்றனர். தசரதனுக்குரிய இறுதிக் கடன்களைச் செய்யும் தறுவாயில் தசரதனின் இறுதிக் கூற்றுப்படி பரதன் தகுதியற்றவன் ஆகின்றான். வசிட்டர் சத்துருக்கனைக் கொண்டு எரியூட்டச் செய்து ஈமக் கடன்களை முடிக்கச் செய்கிறார்.

தசரதனுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தும் உயிர்போகும்போது ஒருவர்கூட அருகில்இல்லை. இறுதிக் கடன் செய்வதற்கு இருவர் எஞ்சியிருக்கையில் பரதன் தகுதியற்றவனாகிறான். சத்துருக்கன் ஈமக கடன்களைச் சாத்திரப்படி செய்கிறான். வான்மீகி இராமாயணத்தில் பரதனே இறுதிக் கடன்களைச் செய்வதாய்க் குறிப்பிடப்பட்டுள்ளது. சத்துருக்கனுக்கு வான்மீகி அளிக்கத் தவறிய வாய்ப்பைக் கம்பர் தர முன்வந்ததாகவே எண்ண வேண்டியுள்ளது இந்த நிகழ்ச்சியினாலும் கதைக்கு ஆக்கமோ, கதையில் திருப்பமோ ஏற்படவில்லை.

இராமனைக் காண பரதனும் சத்துருக்கனும் காடு நோக்கிச் செல்கின்றனர். கங்கைக் கரைக்கு அக்கரையிலுள்ள குகன் இருவரும் படையுடன் வருவதைக் கண்டு வெகுண்டு "ஆழ நெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ" என்று கோபங்கொண்டு பேசுகிறான். பின் அருகில் செல்லச் செல்ல அவர்களின் தோற்றங்கண்டு,

"நம்பியுமென் நாயகனை ஒக்கின்றான் அயல்நின்றான்
தம்பியையும ஒக்கின்றான்" —குகப்படலம்

என்று எண்ணி அவர்களை வணங்குகின்றான். குகனுடன் பரதனே பேசுகிறான். தன்னுடைய தாயரை அறிமுகப்படுத்தும் போது பரதன் சத்துருக்கனைக் குறிப்பிடுவதாக அமைக்கவில்லை. இராம-னுக்கு இணையாகப் பரதனையும் இலக்குவனுக்கு இணையாகச் சத்துருக்கனையும் குகன் வாயிலாகக் கம்பர் கூறியிருக்கின்றாரே-யொழிய வேறு எந்நிலையிலும் சத்துருக்கனைக் குறிப்பிடவில்லை.

இவ்விடத்திலும் சத்துருக்கன் ஏற்றமிகு பாத்திரமாகப் படைக்-கப்படவில்லை. இராமன் பரதனை அரசாட்சியை மேற்கொள்ளு-மாறு கேட்கிறான். பரதன் மறுக்கிறான். வலியுறுத்தியுங்கூட பிடிவாதமாக மறுக்கிறான். அந்நிலையில் சத்துருக்கனை ஒரு பொருட்டாக எண்ணாது அவனிடம் ஒருவார்த்தை கூட இராமன் பேசவும் இல்லை; அரசாள்வது பற்றிக் கேட்கவும் இல்லை. இதனால் கதைக்கு ஏற்றமோ மாற்றமோ ஏற்படுத்தக் கூடிய நிலை இந் நிகழ்ச்சியின் போதும் சத்துருக்கனுக்கு அமையவில்லை.

இறுதியாக மீட்சிப் படலத்தில் சத்துருக்கன் தோன்றுகின்றான். இராமன் திரும்பி வருவேன் என்று கூறிய காலம் தவறியது கண்டு வருந்தித், தீயிடை வீழப் பரதன் எண்ணுகிறான். சத்துருக்கனை அழைத்து,

''மின்னு தீயிடை யானினி வீடுவென்
மன்னனாதியென் சொல்லை மறாது என்றான்''
—மீட்சிப்படலம்

அதனைச் செவியுற்ற சத்துருக்கன்,

''கேட்ட தோன்றல் கிளர்தடக் கைகளால்
தோட்ட தன்செவி பொத்தித் துணுக்குறா
ஊட்டு நஞ்சமுண்டான் ஒத்து உயங்கினான்
நாட்டமும் மனமும் நடுங்கா நின்றான் — மீட்சிப்படலம்

''நானுனக்கு என்ன தீங்கு செய்தேன்'' என்று கேட்டு இறுதியாக,

''கானாள நில மகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி போனவர்கள்
வருமவதி போயிற்றென்னா

ஆனாத உயிர்விட என்றமை வானும்
ஒருதம்பி அயலே நாணா
யானாமிவ் வரசாள்வென் என்னேயிவ்
வரசாட்சி இனிதே யம்மா'' -மீட்சிப்படலம்

என்று கூறி அரற்றுகின்றான்.

இவ்விடத்தில்தான் சத்துருக்கனின் உண்மைத் தோற்றம் புலப்படுகின்றது. ''மூவர்க்கும் பின்னுளான்'' என்றும், ''மூவர்க்கும் இளையவள்ளல்'' என்றும் கம்பரால் விளிக்கப்படுகின்ற சத்துருக்கன், பரதன் வெறுத்து ஒதுக்கிய அரசாட்சியைத் தானும் வெறுக்கின்றான். தானொரு சிறுபாத்திரமல்ல - அந்நிலையைக் கடந்தவன் என்பதையும் இவ்விடத்தில் உறுதிப்படுத்தி விடுகின்றான்.

சீதையின் கற்பை நிலைநாட்ட இராமன் இலக்குவனை எரியமைக்கச் சொல்கிறான். பரதன் தன்னுயிரை மாய்க்க சத்துருக்கனை எரியமைக்கச் சொல்கிறான். தசரதனுக்கு இறுதிக்கடன் செய்ய பரதன் தகுதியற்றவனாகிய காலத்தில் சத்துருக்கன் தீமூட்டுகின்றான், இத்தகுதியும் கம்பனால் அளிக்கப்பட்டதேயன்றி வான்மீகியால் அளிக்கப்படவில்லை.

கம்பரால் இலக்குவனுக்கு இணையாகச் சொல்லப்பட்ட சத்துருக்கன் குகனாலும் அக்கூற்றை வலியுறுத்திப் பாராட்டைப் பெறுகின்றான். பரதனைஉணர்ந்தகுகனும், கோசலையும் இராமனும் அவனைப் பாராட்டுதல் போல சத்துருக்கன் எவராலும் பாராட்டப் பெறவில்லை என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

மேற்கூறியவற்றால், சத்துருக்கன் ஓரிரு இடங்களிலேயே தோன்றுவதால் தலைமைப் பாத்திரமாகாது, கதைக்கு ஏற்றமோ மாற்றமோ தந்து கதையை நடத்திச் செல்கின்ற பாத்திரமாக அமைகின்ற திறனுமில்லாது, குகனால், பாராட்டுப் பெற்று, இராமனின் இளவல் என்பதற்கேற்பப் பரதன் கூறியவிடத்து அரசாட்சியை ஏளனமாக வெறுத்தொதுக்கிச் சிறுபாத்திரம் என்ற நிலையைக் கடந்து மிளிர்கின்ற விந்தைப் பாத்திரமாகவே விளங்குகின்றான் என்பது புலனாகின்றது.

# இராமாயணக் கும்மி

சு. சுபாஷ் சந்திர போஸ்
தமிழ்ப் பல்கலைக் கழகம்

## கோட்டுரிஷி அயோத்தி நகர் வருதல்

சேதியுந் தானுமே பட்டணத்தில் மிகச்
சென்றிடத் தானே சிரோமபதர்
வீதிகள் தன்னை யலங்கரித்தே வைத்து
முன்னிட வந்தாரே வேந்தனுமே
கோட்டு மகாரிஷி தன்னையுமே யப்போ
கோலியே வந்து கும்பிட்டெழுந்து
தாட்டீக வானுமே ரோமபத முனி
தன்னை யழைத்துமே தானடந்தார் 44

மன்னனுடப் பட்டணம் சென்றிடவே யப்போ
மின்னொடு மேகம் பொழிந்திடவே
தன்னுட பெண்ணையுந்-தானளிக்க முனி
சந்தோழமாகவே தானி ருந்தார்
அன்று முதலுமே இன்றளவும் அவர்க்கு
ஒன்றுங் குறைவில்லை யங்குமே தான்
மன்றி லுதாரனும் ரோமபத னிதம்
வாழ்த்தி வணங்கியே வைத்திருந்தார் 45

ஆரங்கே போனாலும் கண் விடார்
மூவரண்டா முனிவற்கும் நின்றுவிடார்
நீரங்கே போனாலே சென்றிடு வாரிது
நிட்சய மென்றாரே நீதியுள்ளான்
அப்போ சுமந்திரர் தன்னையுமே யர
சாண்மையைப் பாருமென் றங்குவைத்து
செப்ப முடனே விதிஷ்டரையு மங்கே
தெண்ட னிட்டானே தெசரதனும் 46

அய்யனே தந்திடு வார்த்தை யென்றார்முனி
ஆசிரமத்தே யனுப்பி விட்டார்
செய்யதோ ராச தசரதனு மவன்
சென்று நடந்தானே சேனை யொடும்
ஓசையுமாக வயோத்தி யனும் வரும்
உண்மை யறிந்தங்கே ரோமபதர்
தேசபதிக்கு முன்வந் தெதிரே யப்போ
சென்று மழைத்துமே செப்பலுற்றார் 47

பட்டணந் தன்னிலே கூட்டியே போய்மிகப்
பாங்குடன் மிக்க விருந்து பண்ணி
இஷ்டமாகவே ராசனையும் நீரும்
ஏதையா இங்கே எழுந்தீரென்றார்
ஆர மணிந்த மார்பழக னவனை
அயோத்தி னாடனப்போ துரைப்பான்
பார மகாமுனி தன்னையுமே நம
தூரை விடுமென்றார் பார்த்திபனும் 48

சந்தோழமாகவே ரோம பத ரப்போ
தானுந்தசரதன் தன்னுடன் போய்
வந்திக்கத் தானுமே மாமுனியு மிந்த
மன்னனும் எவ்விடம் வாசமென்றார்
சக்கர வர்த்தியின் வங்கிழவா னிவர்
தர்ம சொரூப தசரதனார்
மிக்கவுந் தேவரீர் தன்னையுமே வர
வேண்டியே வந்த விருப்பமென்றார் 49

ஆகவு மிக்க மகிழ்ச்சியுடன் முனி
தானும் சுமதியோ டப்பொழுதே
போகவுந் தானுமே ரோம பதருடன்
போயி அயோத்திதனில் புகுந்தார்
மாணிக்கம் பச்சை வைரமொடு செய்த
மண்டபம் தன்னில் மகாமுனியை
ஆணிக்கை யாகவும் தானிருத்தி யவர்க்
கர்ச்சனை செய்தா ராசனுமே 50

வதிஷ்டரும் வந்து கண்டா ரிவை
யந்த ரங்கத்தி லிருந்து கொண்டார்
தி முனியொடு வார்த்தையுமே மிகச்
சொல்லியே கொண்டிருந்தார் துணையாய்
மமுஞ் செய்ய வதிஷ்டருமே முனி
யானவர் தன்னை யறியவுமே
கேமும் கேள்வியும் நாளையுமே நீரும்
உத்தேசம் பண்ணுமென்றே யுரைத்தார். 51

## வதிஷ்டர் யாகம் நடத்தல்

நண ரூப வதிஷ்டரிஷி மத்த
நாளுமே யாகம் நடத்திடவே
பூன வாகுதி முன்னிலையில் மிகப்
போதவு வந்தார் புனிதரிஷி
தே ரிஷிகள் மறையவர்கள் சிவ
சித்தருமங்கே சிறந் தெழுந்தார்
யபருந்தானுமே திருந்துமே தான்
உபசாரமும் செய்தே யரு கிருந்தார் 52

சேட்டு ரிஷியுமே வந்திருந்தார் மறை
கூறிய தர்ப்பையைக் கோரியிட்டே
பேட்டுமே யாகுதி மூண்டுவிட்டே தவப்
போதிமையாகவே பூசை யிட்டார்
பாசம் போலவு மப்பொழுதே கையில்
பத்தியே தானும் பொற்பள்ளையத்தில்
தபக மானதோ ரக்கினியு மது
தானுமே தூக்கியும் தந்ததுவே 53

வதிடும் பள்ளையம் தன்னையுமே ரிஷி
மாமறை யோர்களும் வாழ்த்தியுமே
ததிடக் கும்பிட்டு வாங்கினனே யதைத்
தன் கரத்தாலே தசரதனும்
பயச மானதை மாமுனியு மிகப்
பார்த்தீபன் தன்னையும் பார்த்துமேதான்
நாயகிமார்கள் தமக்குமே தானிதை
நண்பொடு மீந்திடும் ராசேயென்றார். 54

(தொடரும்)

# அறிவியல் விந்தை

—அசாமி

அன்று விடுமுறை நாள். அரசு அலுவலகங்களும், வங்கி-களும் மூடப்பட்டுள்ளன. இருப்பினும் அழகான நீலநிறக் கார் ஒன்று கடைத்தெருவில் ஒரு கிளை வங்கியின் எதிரில் வந்து நிற்கிறது. மூவர் காரிலேயே அமர்ந்திருக்க, ஒருவர் மட்டும் காரை விட்டு இறங்குகிறார். முன்னமேயே வரிசையாக நின்று கொண்டிருக்கும் சில பேருக்குப் பின்னால் தானும் நிற்கிறார். ஒரு சில மணித்துளிகள்! கிளைவங்கியின் தாழ்வாரத்தில் சுவரோடு இணைக்கப்பட்டிருக்கும் இயந்திரத்தின் முன்னால் சென்று ஒரு அட்டையினைச் சிறிய இடுக்கின் வழியாக உள்ளே தள்ளுகிறார். மறு வினாடியே கீழே பொருத்தப்பட்டுள்ள தட்டில் குறிப்பிட்ட தொகை வந்து விடுகிறது. காரில் இருந்தவர்களுக்கு வியப்பு!

அமெரிக்காவில் கலிபோர்னியா நகரத்தில் மட்டுமன்றி, வாஷிங்டன், நியூயார்க் போன்ற பெருநகரங்களிலும், கனடாவிலும் புழக்கத்தில் வந்திருக்கும் இம்முறை எந்திர மூளையின் அண்மைக் காலத்திய விந்தையாகும். வங்கியில் உள்ள நமது இருப்புத் தொகையினும் அதிகமாகக் கேட்டாலோ, வங்கியின் அட்டையைப் போன்று அச்சடித்து வேறு யார் பணம் கேட்டாலோ, எந்திரம் வேலை செய்யாது. வரிசையில் நின்று பணம் வாங்காமல் திரும்-பினால், அங்கு நிற்கும் ஏனையோர் ஏளனமாகவும், ஐயத்தோடும் பார்க்கக்கூடும். எனவே இந்த முறையில் சூதும், வாதும், பொய்யும் புரட்டும் இதுகாறும் நடக்கவில்லை.

கம்ப்யூட்டர் இந்த விந்தையினை எப்படிச் செய்கிறது? ஒவ்வொருவருக்கும் வங்கியில் உள்ள இருப்புத் தொகை தலைமை வங்கியில் உள்ள ஒரு எந்திரத்திற்குச் சொல்லப்பட்டு விடும். கிளை வங்கியில் நமது அட்டையினைச் செலுத்தியதும், மின் அலைகளின் மூலம் தலைமை நிலைய எந்திரத்தோடு ஒருசில வினாடிகளில் தொடர்பு கொண்டு பணம் கொடுப்பதா மறுப்பதா என்பதைச் சிறிய எந்திரம் முடிவு செய்து விடும். வங்கியினர் கொடுத்து நாம் வைத்திருக்கும் அட்டை, மின் காந்தம் பொருத்தப்பட்டுள்ளது.

அதனை எங்கும் இழந்து விடாமல் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு. அட்டையைத் தவறவிட்டால் பணம் போய் விடுமே என்று கவலைப்படவேண்டியதில்லை. நமக்கும் வங்கிக்குமே தெரிந்த இரகசியக் குறியீட்டெண்ணை அட்டையில் குறித்தால் தான் பணம் கிடைக்கும்.

வங்கியில் சென்று, வில்லையை வாங்கிக் கால் கடுக்க நின்று, ஒவ்வொரு இடத்திலும் கையொப்பமிடுவதைப் பார்த்துக், கடைசியாக வரிசையில் நின்று வில்லையைக் கொடுத்து பணம் வாங்குகின்ற முறையினை விட, இந்த அறிவியல் அற்புதம் நேரத்தை மிச்சப்படுத்துகிறது காத்திருக்கும் தொல்லையினைத் தவிர்க்கிறது இத்தகு விஞ்ஞான விந்தை இந்திய மண்ணுக்கு எப்போது வருமோ!

என்னருந் தமிழ்நாட்டின் கண்
எல்லோரும் கல்வி கற்றுப்
பன்னருங் கலைஞானத்தால் பராக்கிரமத்தால்
அன்பால்
உன்னத இமயமலைபோல் உயர்ந்திடுங்
கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று இயம்பக்கேட்டிடும்
நாள் எந்தநாளோ!

— பாரதிதாசன்

## விடுதலையா? — மு. வ. வின் சிறுகதை

Dr. தே. ஆண்டியப்பன்,
இணைப் பேராசிரியர்—மதுரைப் பல்கலைக்கழகம்

இலக்கியத் திறனாய்வு என்பது பல படிநிலைகளில் நின்று பார்க்க வேண்டிய பொதுச் செயலாக எண்ணப்படுகிறது[1]. அதனால் படைப்பின் இயல்பு, அமைப்பு, உட்கூறுகள், அவை ஒன்றோடொன்று பின்னிக்கிடக்கும் பிணைப்பின் இரகசியங்கள், பின்னணி, இழைபு, உரிப்பொருள் முதலிய தலைப்பில் எல்லாம் ஆராயத் தலைப்படுகின்றோம். ஆனால் படைத்த பொருளின் இடையே ஊடுருவி நிற்கும் படைப்பாளனது இதயத்தை உணர்ந்து, அவனது அந்தரங்க வேட்கையை வெளிக் கொணரும் முயற்சிகள் இப்போது பெரிதும் தேவைப்படுகின்றன. காலஞ்சென்ற நம்பி கிருஷ்ணன் எழுதிய 'சுதந்திர நாள்' என்ற கதை நினைவுக்கு வருகிறது. சுதந்திர தினத்தைக் கொண்டாட விடுமுறை அளித்த பின்னும், மாணவர்கள காலையிலே வந்துவிடவேண்டும் என்பது கட்டளை. கலெக்டர் வரவை எதிர்நோக்கி மாணவர்கள் பிற்பகல் வெயிலில் அணிவகுத்து நிற்கின்றனர். அவரோ பொழுது சாய்ந்த போது வருகிறார். சில நிமிடங்களில் பேசிவிட்டு போகவேண்டிய நிலை. மழை பெய்யத் தொடங்கிற்று. மாணவர்கள் மழையில் நனைந்தவாறே ஓடுகின்றனர். இக்கதையின் வடிவமோ, நிகழ்ச்சியோ, வருணனை முறையோ பெரிதன்று. அவற்றைப் பெரிதுபடுத்தினாலும் படைப்பாளியின் இதயத்தைக் காணமுடியாமல் போய்விடும். எனவேதான் படைப்பின் உள்புகுந்து அவரைச் சிக்கெனப் பிடித்தேன் என்று சொல்லுமளவிற்கு ஆய்வை வலுப்படுத்த வேண்டியிருக்கிறது. நம்பி கிருஷ்ணனின் விமரிசனமே இக்கதையில் மிகவும் முக்கியம். அதுவும் நேரடியாகப் புலப்படவில்லை. சுதந்திர நாளிலும் சுதந்திரமில்லை. அதிகாரியின் வரவிற்கு குழந்தைகள் உட்பட அனைவரும் காத்துக்கிடக்கும் அடிமைநிலை இன்னும் மறையவில்லையே என்ற ஏக்கத்தைக் குறிப்பாகக் காட்டுகிறது கதை.

---

1. The criticism of literature can hardly been simple or one level activity. Northrop Frye Anatomy of criticism, Page 71.

டாக்டர். மு.வ. அவர்களின் கதைத் தொகுப்பில் ஒன்று விடுதலையா என்பது. அதில் 'கட்டாயம் வேண்டும்' என்ற தலைப்பில் கதையொன்று அமைகிறது. சென்னையில் டிராம் வண்டியை எதிர்பார்த்து நிற்கிறார் ஆசிரியர். சிறுவன் ஒருவன் முன்னே வருகிறான். நலம் கெடாத உடல்; கண்களில் கரவற்ற பார்வை; தோற்றத்தில் இந்நாட்டின் இளஞாயிறு. ஆனால் பிச்சை கேட்கிறான். தோன்றிய இரக்கம் தோன்றியவாறு மறைகிறது. காரணம், உலகை ஏமாற்றும் சோம்பேறிக் கூட்டத்தில் பாதிப்பேர் பிச்சைக்காரர். பேருந்து நிற்கும் இடம் எல்லாம் அவலக்குரல் கேட்டுக் கேட்டு ஏற்பட்ட அலுப்பு. அது இங்கும் நிலைத்துவிட்டது. ஏழைகளின் வறுமைக்குத் தாமே காரணமாக இருந்தும் மனம் மரத்துப்போன தமிழர்க்கு இரக்கம் தோன்றியபோதே மறைவதும் இயல்புதானே! கொடுக்கும் பழக்கமில்லை. 'மூட்டைத் தூக்கிப் பிழை' என்றார் ஆசிரியர். "கையில் இருக்கும் புத்தகங்களைச் சுமந்துவருகிறேன். காலணா கொடுங்கள் போதும்" என்றான் சிறுவன். பிச்சை கொடுப்பதில்லை என்ற விரதம். இவனைப் போன்ற சோம்பேறியிடம் ஏமாற மாட்டேன் என்ற பிடிவாதம் ஆசிரியர்க்கு. பையனோ வரலாறு பேசுகிறான். சென்ட்ரல் நிலையத்தில் உள்ள மூட்டைத் தூக்கிகள், புதிதாக வந்த அச் சிறுவனை அடித்து விரட்டுகிறார்கள். யாரிடமாவது கேட்கலாம் என்றால் அங்கும் போட்டிக்கு ஆட்கள் கெஞ்சி வாங்கிப் பழக் கூடையைத் தலையில் வைத்ததும் ரிக்ஷாக்காரன் வலியப் பிடுங்கி வண்டியில் ஏற்றுகிறான். தாய் அற்ற நிலை; திக்கற்றுப் போனான். இவ்வாறு அவன் கூறிக் கொண்டிருக்கும் போதே மின்சார வண்டி வருகிறது. ஆசிரியர் அதில் ஏறிவிடுகிறார்.

தடியன் ஒருவன்; பணக்காரனின் மகன். ஆங்கிலம், கணக்கு, தமிழுக்கு என்று தனி ஆசிரியர்கள் இருந்தும் எட்டாம் வகுப்பில் இருமுறை கோட்டை விட்டவன். திரைப்படங்களையும், புதியஉணவகங்களையும் வேலைக்காரச் சிறுமிகளையும் தேடித்திரிபவன். போலீசாரைவசப்படுத்தியவன். இப்போது போலீஸ் அச்சிறுவனை உதைக்கிறான்; பிடரியைப் பிடித்துத் தள்ளினான்; காரி உமிழ்ந்தான். அக்காட்சியை ஆசிரியர் வண்டியில் இருந்தே பார்க்கிறார். தொழில் முடிந்து திரும்பி வரும்போதும் பையனின் நினைவு மறையவில்லை. ஈகையொடு இரக்கம் அறியாத தன்நிலைக்கு நொந்து கொள்கிறார்.

வழக்கம்போல் கடற்கரைக்குப் போகிறார் ஆசிரியர். ஓரிடத்தில் சிறு கூட்டம். சாவு போக்கிலிப் பயல்களுக்கு வரக்கூடாதா? அந்தச் சாவு தனக்கே வரக்கூடாதா என்றார் ஒரு கிழவர். ஆசிரியரோ ஓடிச்சென்று பார்க்கிறார். அதே பையனின் பிணம். போலீசார் அப் புறப்படுத்தினர். காலையில் இருந்த அன்பு. அமைதி, அறிவு, துன்பம் நான்கும் அம்முகத்தில் நிழலாடின. இப்போது துன்பம் மாத்திரம் விடுதலை பெற்றுவிட்டது. கண்ணீர் விடுகிறார் ஆசிரியர் "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்" என்ற குறள் நினைவிற்கு வருகிறது. அந்தப் பையன் இரந்துவாழ விரும்பவில்லையே; கூலிவேலை வேண்-டும்; கட்டாயம் வேண்டும் என்று தானே கேட்டான். இவ்வாறு கதை முடிகிறது

இக்கதை உணர்த்தும் பாடமென்ன? ஏழைக்கு இரங்கவேண்-டும் என்பதா? ஆசிரியர் நெஞ்சிலும் இரக்கம் தோன்றி மறைகிறதே. ஏழைக்கு உதவவேண்டும் என்பதே கருத்தாகுமா? அதுவும் எத்-தனையோ பழங்கதைகளில் வந்த செய்திதானே. புதுமை இல்லாத-போது அதையேன் புரட்டவேண்டும்? நடப்பியல் கோட்பாட்டை நன்கு சித்திரிக்கிறார் எனலாமா? நாம்தான் நாள் தோறும் பார்க்கிற காட்சிதானே! அந்த ஆசிரியரின் மனந்தானே நமக்கும்! பார்த்தும் பாராது செல்லும் வாழ்வை இலக்கியத்தில் பார்ப்பதுதானா இலட்சியம்! இக்கேள்விகளுக்கு எவ்வாறு விடையளிப்பது? இவை-யெல்லாம் இலக்கியப் பிரச்சனைகள் அல்ல. ஒரு சிறு கதைக்குரிய தகுதி இருக்கிறா? வேகம் இருக்கிறதா? தொய்வு இல்லாமல் செய்-தியைப் பேசுகிறாரா? உருவமும் உள்ளடக்கமும் பொருந்திப் போகிறதா? என்று சிந்தனையை வேறுபக்கம் திருப்பி விடலாம் என்றால் அதுவும் படைப்பின் அந்தரங்கத்தைத் தொட்டுப் பாாக்க உதவவில்லை. ஆன்மாவைத் தொட்டுப் பார்க்க உதவவில்லை. பிறகு எப்படி நாம் முடிவெடுப்பது? இதற்கு நாம் வேறொரு கதையை ஒப்பிட்டு நோக்க வேண்டியதாகிறது.

ரஷிய நாட்டு ஏழை கணக்கர் ஒருவர். பலநாள் உழைத்துப் பணம் மிச்சப்படுத்தி வாங்கிய 'ஓவர் கோட்டு' அன்றே திருடப்படு-கிறது. தொடர்ந்து நலம்குன்றி இதயம் உடைந்து போகிறார். அக் கதையைவிமரிசிக்கும்போது திறனாய்வு பின்வருமாறு கூறுவர். What Gogal intends among other things, is that we should be caught up in the experience of misery, that we should know, not simply

in our head but in our bones and blood, at the ends of nerves-what misery is? துயரம் என்பது என்ன? அதனை மூளை-யால் அறிவதன்று. நமது எலும்பும் இரத்தமும் நரம்புகளும் உணர்ந்து கொள்ள வேண்டாமா! அதற்குத்தான் இத்தகைய படைப்பு.காலணா-வில் தன் உயிரைக்காப்பாற்றிக் கொள்ளலாம் என்று கருதி கையேந்திக் கெஞ்சி நின்றானே; வாழத் துடித்தவன் ஒரு பகல் பொழுதில் வாழ்-வைப் பலியிட்டுக் கொண்டானே; அவன்பட்ட வேதனை எவ்வளவு பெரிதாக இருந்திருக்கவேண்டும். எனவே மூளையால் பார்க்காமல் நெஞ்சார உணர்வதற்கு ஒரு கதையைத் தந்தார் மு.வ.

விடுதலையா என்னும் தலைப்பில் இன்னுமொரு கதை. அதனையும் இக்கண்ணோட்டத்தில் பார்க்கவேண்டும். கதையோ இரு கூறுபட்டுக் கிடக்கிறது. முதலில் ஆசிரியன் கதை சொல்வது போல் அமைகிறது. பிற்பகுதியில் ஆசிரியர் பாத்திரமாக நின்று பேசும்நிலை கூற்று முறையில் அமைந்த வேறுபாடு (Mode of narration) கதையோடு நெருங்கி நிற்க வாய்ப்பளிக்கிறது.

முதலில் இளமைக் காலச்செய்தி. பள்ளியில் விழாவிற்குரிய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. கலெக்டர் அலுவலகம் நோக்கிச் செல்ல மாணவர்கள் அணிவகுத்து நிற்கின்றனர். மாலை மூன்று-மணி. அம்மையார் ஒருவர் தம்பேரன் திருவேங்கடத்தை அழைத்துக் கொண்டு வருகிறார். வயது ஐம்பதுக்கு மேற்பட்டு இருக்கலாம். சிவந்த மேனி; கட்டுத்தளரா யாக்கையும் எளிய உடையும் ஒருவகை வீறு அளித்தன. கண்களில் கலக்கமற்ற ஒளி; நடையில் பெண்மையும் வீரமும். பிரெஞ்சு நாட்டில் வீரப்போர் புரிந்த ஜோன் அம்மையாரை உவமை கூறலாம். ஜோன் ஒரு நாட்டைக் காக்க வாழ்ந்தவர். நரசம்மா எனும் இந்த அம்மையார் ஒரு பேரனைக் காக்க வாழ்ந்-தவர். இந்தச் செய்தி மிகவும் முக்கியமானது.

''வாத்தியாரே! எங்கள் பையனும் உங்களோடு வரவேண்டு-மென்று பிடிவாதம் செய்கிறான். வெளியில் போய் அறியாதவன் குழந்தை வீடுவந்து சேரும்வரை உங்கள் பொறுப்பு'' என்று பிரிய மனமின்றிச் சென்றாள் ஊர்வலம் முடிந்ததும் அரசவாழ்த்து; ஆங்கில இசை. முன்னரே எழுதிய ஆங்கிலக் கட்டுரைகளை இளஞ்-சிறார் பலர் வாசித்தனர். மாணவர்களில் அஞ்சாத சிலர் ஆங்காங்கே பேசத் தொடங்கினர். அடங்கி அஞ்சிய மாணவர் பலர் தூங்கத்

தொடங்கினர். திருவேங்கடம் இந்தச்செயற்கையானசிறையில் இருந்து விடுதலைபெற நினைத்தான். ஆர்வத்தால் பகல் உணவு சரியாக உண்ணாதவனுக்குப் பசியெடுத்தது. பாட்டியை நோக்கி மெல்ல நடக்கின்றான். கலெக்டர் மீது பார்வை செலுத்திய தலைமை ஆசிரியர் பையனை மறந்துவிட்டார். வழிநடந்த பையன் நாய்க்கன் பட்டிக்கு வந்துவிடுகிறான். வெறிகொண்ட பையன் தவறிய பாதையில் விரைந்தான்! ஓடினான். விம்மல் அழுகை ஆயிற்று. ஒருசிலர் பையனிடம் ஆறுதல் கூறினர். அப்பா பெயர் என்ன என்றபோது நயனா என்றான். அம்மா பெயரைச் சொல் என்றபோது அம்மாக்கண் என்றான். அவனது குழந்தைநிலையை அறிந்த ஒருவர் தோளில் சுமந்துவருகிறார். அவன் தோளில் இருந்தவாறே தூங்கி விடுகிறான்.

பையனைக் காணாத பாட்டி பிரேமையால் அழுதாள். தவமிருந்து பெற்ற குழந்தை ஐயா! குழந்தையை அனுப்பினேனே 'ஐய்யா! நம்பினேனே ஐயா!' தலைமை ஆசிரியரும் அழுதார். பையன் வந்து சேர்ந்ததும் ஒருபகுதி முடிந்து விடுகிறது. திருவேங்கடம் வளர்ந்த பிறகும் அவன் ஓடிப்போன செய்தியைப் பலரும் குறிப்பிடுவார்கள். அவனுக்கு வெட்கமாக இருக்கும். அவன் பாட்டியும் அவனை ஓர் சிறுவனாகவே எண்ணி அன்பு காட்டினார். இருளைக் கண்டால் பயப்படுவான் என்று அந்த அன்பு மனம் உருகும் விளக்குவைத்தும்பேரன் வரவில்லைஎன்றால் அன்பு நெஞ்சம் தெருவில் அலையும். புகைவண்டி நிலையத்தில் நண்பர்களோடு அவன் பேசிக் கொண்டிருக்கும் போது இரவு 7½ ஆயிற்றே என்று அந்த அன்புக் கிழம் தேடிவரும். ஆனால் அது பேரனுக்குப் பிடிக்கவில்லை. இன்னும் நான் என்ன சிறுபிள்ளையா என்று கடிவான். நேரம் ஆகிவிட்டதே அப்பா என்று அன்பு நெஞ்சம் பதில் கூறும்.

திருவேங்கடம் தொழில் காரணமாக வெளியூர் சென்றான். ஓராண்டு கழிந்து வருகிறான். உரிமை பாராட்டிய நிலத்தைக் காணும்ஆசை. ஆர்வத்தோடு வருகிறான். ஆனால் பாட்டியின் நிலை? தன்னையும் பேரனையும் மறந்த பித்தர்நிலை. அன்போடு பார்த்த கண் எதையோ பார்க்கிறது. அன்னமிட்ட கை கல்லும் மண்ணும்

அள்ளுகிறது. இருண்ட அறையில் தூக்கமின்றி வாழ்க்கை கழிகிறது. கடிகாரம் 'டிக்' 'டிக்' என்று ஓடுகிறது. முள் ஓடவில்லை, காலம் காட்டவில்லை. பாட்டியின் வெற்றிலைப் பித்து மாறவில்லை. கொடுக்க மறுத்தபோது தன்புடவையை, காகிதத்துண்டை மென்று கொண்டிருப்பாள். கற்பனையில் கோழியை விரட்டுவாள். கற்பனைக் குழம்பு சமைப்பாள். காலை நீட்டிக் குழந்தையைக் காலில் போடு என்பாள். தாலாட்டு புறப்படும். நந்தனார் கீர்த்தனை, தேவாரம் எல்லாம் வெளிப்படும்,

ஒரு நாள் இரவு - முன்னேரம். நல்ல மழை. வீடெல்லாம் ஒழுகல். இரவு இரண்டு மணிக்கு எழுந்தான்; தெருக்கதவைத் திறந்து வெளியே வந்தான். திண்ணை மீது நாய் ஒன்று எந்த சீர்திருத்தத்தையோ எண்ணிக் கொண்டு தனது வாலின் கோணலை மறந்தவாறு குந்தியிருந்தது. தென்னை மரத்தில் இருந்து தேங்காய் ஒன்று தொப்பென விழுந்தது. அமைதியாக இருந்த நாய் ஓடிச்-சென்று குரைத்தது. திருவேங்கடம் தேங்காயை எடுத்துக் கொண்டு வீட்டில் நுழைகிறான். பித்தர் அறையில் சப்தம். அப்பா! பையா! திருவேங்கடம், எங்கேடா போய்விட்டாய் என்ற குரல். திருவேங்கடம் வந்து பார்க்கிறான். விளக்கொளியில் பாட்டியைப் பார்க்கிறான். சுவரில் முட்டி மோதி இரத்தம் வடிகிறது. ''வாத்தியாரே, பையன் எங்கே? அப்போதே சொன்னேனே! நம்பினேனே'' என்ற அலறல் ஓயவில்லை. அவன் பாட்டியின் குருதியைத் துடைக்கிறான். முடியாக் கதைமுடிகிறது.

பிரேமை, சித்தபிரேமை ஆகும் அளவிற்கு விட்டுப்பிரிந்தவன் யார்? பல சீர்திருத்தங்களை எனணியிருந்த நாய், தன் வாலின் கோணலை மறந்திருந்தது என்பதற்குப்பொருள் என்ன? அந்த அன்பு தனக்கோர் சிறையென்று விடுதலை பெற வெளியூர் ஓடினானே. தன்மீது அன்பு கொண்டு அலைந்த ஆன்மாவின் விடுதலையை எண்ணிப்பார்க்க இதயமில்லையே தென்னை மரத்தில் விழுந்த தேங்காயை எடுத்து வந்தானே! குலமரபில்அன்பேந்தி முற்றிமுதிர்ந்த காய் போல பாட்டியின் சடலமும் விழுந்து விட்டதா? ஆசிரியர் தந்திரமாக விட்டுவிடுகிறார். முடியாதது போல் கதை முடிந்தது எனலாமா? பழைய நினைவின் சாயலால் வருந்தும் நெஞ்சம்

படைத்தவன்; அன்பின் எளிய சிறையைக் கூட ஏற்றுக்கொள்ள வலிமை யற்றவன்; இப்போது மாத்திரம் விடுதலை பெற்று விட்-டானா? இப்போது பாட்டிக்கு விடுதலையா? அவனுக்கு விடுதலையா?

மு. வ, தம் சொந்த வாழ்வில் எழுந்த உண்மை நிகழ்ச்சி-யையும் உணர்வின் தாக்கத்தையும் கதையாக வடிக்கிறார் இங்கோர் தன்னிலை விமரிசனம் பிரேமை சித்தபிரேமை என்னும் நிலையில் ஊசலாடுகிறது. ஆசிரியர் விடையின்றி, விடுதலையின்றித் தவித்தவர். கதையாக்கித் தந்துவிட்டதால் சிறிது விடுதலை பெற்றிருக்கலாம் ஆன்மாவைத் தேற்றியிருக்கலாம். இப்படிச் சிறுகதைகளையும் பல கோணங்களில் கண்டு ரசிப்பது இலக்கிய இன்பம் பயப்பதாகும்.

---

ஈசன் அடியார் இதயம் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்,
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமது ஆகுமே நம் நந்தி ஆணையே

மந்திரம் ஓர் எழுத்து உரைத்த மாதவர்
சிந்தையின் நொந்திடத் தீமைகள் செய்தவர்
நுந்திய சுணங் கனாய்ப்பிறந்து நூறு உரு
வந்திடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

—திருமூலர்.

## அமெரிக்காவில் அனைத்துலக ஒப்பிலக்கிய மாநாடு

—டாக்டர். வை. சச்சிதாநந்தன் M. A, Ph. D
ஆங்கிலத் துறைத்தலைவர்

தொன்று தொட்டு ஒரு இலக்கியத்தை மற்றொரு இலக்கியத்தோடு ஒப்பிடுவதோ அல்லது ஒரு நூலாசிரியரை மற்றொரு நூலாசிரியரோடு ஒப்புமை செய்வதோ அறிஞர்களிடையே ஒரு பழக்கமாக இருந்து வந்திருக்கிறது. இதற்குத் தலையாய காரணம் ஒப்புமையின் மூலம் இலக்கியத்தின் நுட்பதிட்பங்களை ஆழ்ந்தும் பரந்தும் அனுபவிக்கலாம். ஏறத்தாழ ஒரு நூற்றாண்டாகவே ஒப்பிலக்கியம் கற்பிக்கப்படக்கூடிய பாடம் என்ற நம்பிக்கை வளர்நது வந்தாலும், இந்நூற்றாண்டின் இடைக்காலத்திருந்துதான் பல நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்கள் அதை ஒழுங்குமுறைப் பாடமாக (discipline) பயிற்றுவிக்க முற்பட்டிருக்கின்றன. இந்த சீரிய பணியில் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் ஒருமுக்கிய இடம் வகிக்கின்றன. அதற்குக் காரணம் இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பிய நாடுகளிலிருந்து பல சிறந்த இலக்கிய அறிஞர்கள் இடம் பெயர்ந்து அமெரிக்காவில் குடியேறியதுவே. ஆயினும், பிரெஞ்சு நாட்டில்தான் ஒப்பிலக்கியம் பிறந்தது. ஆதலினால் தான் பிரெஞ்சு அறிஞர்களின் பெருமுயற்சியால் அனைத்துலக ஒப்பிலக்கியக் கழகம் 1955ல் நிறுவப்பட்டு முதன்முதலில் வெனிஸ் நகரத்தில் கூடியது. அப்போதிருந்து மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை இக்கழகம் தவறாமல் கூடுகிறது. இவ்வாண்டு ஆகஸ்ட் மாதம் 22—29 தேதிகளில் நியூயார்க் பல்கலைக்கழகத்தின் சார்பில் புகழ்பெற்ற வாஷிங்டன் சதுக்கத்தில் அமைந்துள்ள வாண்டர்பில்ட் (Vander bilt) கட்டிடத்தில் பத்தாவது முறையாகக் கூடியது.

எனது ஒப்பிலக்கியப் பேராசிரியரும் கழகத்தை நிறுவிய அறிஞர்களில் ஒருவருமான ரிமாக் அவர்களின் முயற்சியால் இவ்வொப்பிலக்கியக் கழகத்தில் நான் ஒரு உறுப்பினரானேன். இம்முறை 'கவியியல்', 'இலக்கிய வரலாறு' ஆகிய இரண்டு தலைப்புக்களின் கீழ் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மானியம், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளில் கட்டுரைகள் படிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இரண்டு பக்கங்களில் ஒரு கட்டுரையின் சாரம் அந்தந்த அறிஞர் குழுக்களுக்குக் கழகம் கூடுவதற்கு ஓராண்டிற்கு முன்பே அனுப்பப் பட வேண்டும். பரிசீலனை செய்து தேர்தெடுக்கப்பட்ட கட்டுரைச் சுருக்கங்களே கட்டுரைகளாக மாற்றப்பட்டு கழகக் கூட்டத்தில் படிக்கப்படும்.

ஐந்து கண்டங்களைச் சேர்ந்த சற்றேறக்குறைய 40 நாடு-களிலிருந்து முந்நூறுக்கும் அதிகமான அறிஞர்கள் ஒப்பிலக்கியக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இவர்களில் ஐவர் இந்தியர்கள். இவர்கள் அனைவருமே கட்டுரைகளைப் படிக்க அழைக்கப்-பட்டவர்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஒப்பிலக்கியத்தில் உள்ள ஈடுபாட்டின் காரணமாக சிலர் வந்தனர். கழக உறுப்பினர்கள் பலமொழிகளைப்பேசுபவர்களாகயிருந்தாலும், எல்லோருமே ஆங்கில மொழியைச் சரளமாகவோ மெதுவாகவோ பேசும் ஆற்றலுடையவர். வங்காளிகளைத் தவிர மற்றவரெவரும் பிறர்முன்னிலையில் தங்கள் தாய்மொழியில் பேசவில்லை.

கூட்ட ஆரம்பமே ஒரு சுவையான நிகழ்ச்சி. மேளதாளங்கள், பாடல்கள் இடம் பெறவில்லை. அரசியல்வாதிகளோ அல்லது தங்களைப் பெரிய மனிதர்கள் என்று சொல்லிக்கொண்டு மேடையில் தோன்றித் தாங்கள் வணங்கும் மனித தெய்வங்களைத் துதிபாடும் கூட்டத்தையோ அங்கு பார்க்கமுடியவில்லை. ஆகஸ்ட் 22 ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஒப்பிலக்கியக் கழகத்தின் செயற்குழு தனியே கூடி சில முக்கிய முடிவுகளை எடுத்தது. மறுநாள் காலையில் ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படிக்க உலகின் பல நாடுகளிலிருந்தும் வந்திருந்த பேராளர்கள் ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட ார். ஒவ்வொரு பேராளரின் பெயரும் மையினில் எழுதப்பட்ட நீலநிற பிளாஸ்டிக் பை (நம்மூரில் அது பத்து ரூபாயிற்கு மேல் விலை பெறாது), ஒரு பிளாஸ்டிக் எழுதுகோல், கழகத்தின் சார்பில் ஒரே வேளையில் பல அறைகளில் நடக்க இருக்கும் கூட்டங்களைப் பற்றி முழுவிவரங்கள், நியூயார்க்கையும், அதன் சுற்றுப்புறத்திலுள்ள சிலசிறந்தபல்கலைக்கழகங்களையும் பேராளர்கள் செல்ல விரும்பினால் அதற்கு அளிக்கப்படும் சலுகைகள் ஆகியவற்றைப் பற்றிய செய்தி-களை நியூயார்க் பல்கலைக் கழக ஒப்பிலக்கியத் துறையைச் சேர்ந்த ஒரு சிறுகுழுவினர் அளித்தனர். உடனே பல பேராளர்களும் நிகழ்ச்சி நிரலை மிகவேகமாகப் பார்த்துவிட்டு எந்தெந்தக் கூட்டங்களுக்கு எங்குச் செல்வது என்று உடனடியாக நிச்சயித்துக் கொண்டு, ஒரு ஓட்டப்பந்தயமே நடத்தினார்கள். வாண்டர்பில்ட் கட்டடத்தின் முதல் மாடியிலும் இரண்டாவது மாடியிலும் உள்ள பல அறைகளில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவும், பல்வேறு அறைகளுக்குச் செல்லவும் உறுப்பினர்கள் காட்டிய விரைவும், வேகமும் காலந்தவறாது குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ச்சி-

யினை நடத்தவேண்டும் என்ற ஆர்வத்தை வெளிப்படுத்தியது. அன்று மாலை லோயப் (Loeb) மாணவர் மையத்தில் நடந்த ஆடம்பரமற்ற வரவேற்பில் நியூயார்க் பல்கலைக்கழகத் தலைவர் (துணைவேந்தர்) ஜான் பிரேடமஸ் (John Brademas) வரவேற்புரை நிகழ்த்த, அமெரிக்கப் பொதுமன்ற உறுப்பினர் பால் சைமனின் சிறிய உரைக்குப் பிறகு பேராளர்கள் விருந்தளிக்கப்பட்டனர்.

இலக்கிய வரலாற்றின் வரம்பிற்குள் 'நாடகமும் கலைகளும்', 'இலக்கிய நிகழ்ச்சியினுடைய தன்மையும் வரலாற்றுத் தொடர்பும்' 'இலக்கிய வரலாற்றிலுள்ள மாறுதல்களைப் பற்றிய விளக்கம்' போன்ற தலைப்புக்களின் கீழும் ஒப்புமைக் கவியியலின் வரம்பிற்குள் 'கவியியல் கொள்கை' 'கவிதையும் இலட்சியத் தத்துவமும்', 'கீழை—மேலை இலக்கியங்களிலுள்ள கவிதை அமைப்புக்களை ஒப்பிடுதல்' போன்ற தலைப்புக்களின் கீழும் பல நுணுக்கமான கட்டுரைகள் படிக்கப் பெற்றன. இவ்வாண்டு ஒப்பிலக்கியக் கழகம் அமெரிக்க நாட்டில் கூடியதால் அமெரிக்க இலக்கியத்திற்கும் தென் அமெரிக்கக் கண்டத்தில் ஸ்பானிஷ் மொழியில் உள்ள வட்டார இலக்கியங்களுக்கும் நிலவும் ஒற்றுமை, வேற்றுமைகளைப் பற்றியும் கட்டுரைகள் படிக்க இணக்கமளிக்கப்பட்டது. இதைத்தவிர நாள்தோறும் பிற்பகல் மூன்று மணியிலிருந்து உலகஇலக்கியம், வாய்மொழிக் கவிதை, மூல பாடத் தத்துவம், இலக்கியம் பயிற்றுவிப்பதில் இலக்கியக் கலைச் சொற்களுக்குள்ள இடம் போன்ற தலைப்புக்களின் பேரில் சுவையான கருத்தரங்குகள் நடந்தன. இலக்கியத் திறனாய்விலும் ஒப்பிலக்கியத்திலும் சிறந்து விளங்கும் ஹாரி லெவின் (Harry Levin), ரெனே வெல்லக் (Rene Wellek), ஹென்றி ரிமாக் (Henry Remak), உல்ரிச் வைஸ்டைன் (Ulrich Weisstein), லிலியன் புர்ஸ்ட் (Lilian Furst) போன்றவர்கள் பேராளர்களாகக் கலந்து கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளையும்படித்தளித்தனர். இவர்களில் சிலர் 70 வயதை நெருங்கி விட்டாலும் அவர்களுடைய பல்கலைக் கழகங்களில் இன்னும் தொண்டாற்றி வருகிறார்கள். 60 வயதிற்குமேல் அவர்கள் வகுப்பறைக்குச் செல்லாமல் தங்களுடைய காலத்தை ஆராய்ச்சியில் செலவழிக்கின்றனர். அவர்களுக்கு முழுச்சம்பளம் அளிக்கப்படுகிறது.

கூட்டம் நடக்கும் ஒவ்வொரு அறையிலும் மூன்று அல்லது நான்கு பேராளர்கள் ஒவ்வொருவரும் 20 மணித்துளிகள் கட்டுரையைப் படிக்க வேண்டும். 15 மணித்துணிகள் ஒவ்வொரு கட்டுரையின்

பேரிலும் கலந்துரையாடல் அனுமதிக்கப்பட்டது. 'காலம் பொன்னானது' என்று நாம் அட்டை அல்லது மரப்பலகையில் தீட்டி கண்டுகளிப்பதை மேலை நாட்டவர் நடைமுறையில் கண்டிப்புடன் செய்து காண்பிக்கின்றனர். ஒப்பிலக்கியக் கழகக் கூட்டம் அதற்கு விதிவிலக்கல்ல. ஒவ்வொரு அறையிலும் 20 முதல் 40 வரை பேராளர்கள் கூடினர். லெவின், வெல்லக் போன்ற பேரறிஞர்கள் கட்டுரைகள் படித்த அறைகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது. பலர் உட்காரமல் நிற்க நேரிட்டது. கட்டுரை ஆசிரியர் மேதையாக இருந்தாலும் கேட்பவர்கள் மதிநுட்பமான கேள்விகளின் மூலம் திணற அடிக்க முயன்றனர். முதிர்ந்த வயதிற்கோ அறிவிற்கோ அறிவுலகத்தில் பயப்படுவது ஒரு சாபக்கேடு.

என்னால் மறக்கமுடியாத நிகழ்ச்சி இற்றைநாள் திறனாய்வாளர்களில் சிறந்தவரான ரெனெவெல்லக் கட்டுரை படித்தளித்த கூட்டத்தில் நான் கலந்து கொண்டதுவே. அவர் மூப்பின் காரணமாக சற்றுத் தள்ளாடித்தான் நடக்கிறார். காற்றுக் கட்டுப்பாட்டுடைய அறைகளில் பொருத்தப்பட்டிருக்கும் கனமான கண்ணாடிக் கதவுகளை திறப்பதற்குக் கூட அவருக்குப் போதிய சக்தி இல்லை. அவர் கூட்டங்களில் கேள்வி கேட்கும் பொழுதோ (அவர் சென்ற சில கூட்டங்களுக்கு ஒரு உளவாளிபோல் அவரைப் பின் தொடர்ந்தேன்) அவர் கட்டுரையின் பேரில் எழுந்த கேள்விகளுக்கு அவர் விடையளிக்கும் பொழுதோ வெல்லக்கின் அறிவு பரிமளிக்கிறது. அவருடைய கட்டுரையின் தலைப்பு: 'இலக்கியத் திறனாய்வு: கொள்கையும் நடைமுறையும்'. பேராளர்கள் பலருக்கும் தெரிந்த ஆங்கிலத் திறனாய்வை ஒதுக்கி வைத்து, ஐரோப்பாவில் ஜெர்மனி முதல் ரஷ்யா வரையில் வழங்கும் திறனாய்வை தனக்கே உரிய சாட்டையடி பாணியில் அலசினார். இதற்கு மூல காரணம், ஜெர்மனியில் சில அறிஞர்கள் இவருடைய திறனாய்வு முறையில் குற்றம், குறைகள் கண்டதே. கேள்விகளுக்கு வெல்லக் ஆணித்தரமாக விடையளித்ததில் வியப்பில்லை. எனக்குப் பின்னால் அமர்ந்திருந்த சிலபேராளர்கள் அவர்குறிப்பிட்ட சில திறனாய்வாளர்களின் பெயர்களைக் கேள்விப்பட்டதே இல்லை என்று தங்களுக்குள் பேசிக் கொண்டதை நான் தற்செயலாகக் கேட்டேன். வெல்லக் ஐரோப்பிய இலக்கியங்களைக் கரைத்துக் குடித்த ஒருசில அறிஞர்களில் தலை சிறந்தவர்.

நான் படித்த கட்டுரை, கிரேக்க அறிஞர் அரிஸ்டாடிலின் கவிதையியல் நூலையும் தொல்காப்பியரின் பொருளதிகாரத்தையும் ஒப்புமை முறையில் சீர்தூக்கிப் பாாப்பதாகும். தொல்காப்பியர் இலக்கியத்தின் நுட்பதிட்பங்களை அலசி ஆராய்ந்தது போல், அரிஸ்டாடில் செய்யவில்லை. ஆயினும் தொல்காப்பியர் தமிழ்க் கவிதையியலுக்கும் அரிஸ்டாடிலின் மேலை இலக்கியத்தின் கவிதையியலுக்கும் அடி-கோலினர். இருவருமே வாழ்க்கையோடு கவிதை ஒன்றியது என்று கருத்துத் தெரிவித்ததல்லாமல் கொள்கைகளை நிறுவுவதிலும் அதற்கு மொழியைப் பயன்படுத்துவதிலும் விஞ்ஞான நோக்கையும் தர்க்க முறையையும் கையாண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்ட பேராளர்களில் பலர், ஐரோப்பாவிலிருந்து முக்கியமாக ஜெர்மனி-யிலிருந்து வந்த பேராசிரியர்கள். அவர்கள் என்னுடைய ஒப்பு-மையைக் குறை கூறாமல் கேட்ட ஒரு கேள்விக்கு என்னால் பதிலளிக்க இயலவில்லை. அது: ஏன் இற்றை நாள்வரை தொல் காப்பியரின் கவிதையியலை மேலைநாட்டு அறிஞர்களின் கவனத்-திற்குக் கொண்டு வரவில்லை என்பதுதான். அவருடைய பொரு ளதிகாரத்தையாவது சிறந்த ஆங்கில மொழிபெயர்ப்புடனும் கவனமாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சிக்குறிப்புகளுடனும் வெளியிடும் அவசியத்தை அப்பொழுதுதான், நான் உணர்ந்தேன். அப்பணியைக் காலதாமதன்றிச் செய்வது என்று என்னுள் உறுதி செய்து கொண்டேன்.

ஒப்பிலக்கியக் கழகத்தின் கடைசிநாளான ஆகஸ்ட் 29ந் தேதியன்று பேராளர்கள் நியூயார்க் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையக் கட்டிடத்தில் தரைமட்டத்திற்குக் கீழுள்ள பெரிய அரங்கத்தில் கூடி 1985-ல் நடக்கவேண்டிய கழகக் கூட்டத்திற்காக நிர்வாகக் குழுவினரைத் தேர்ந்தெடுத்தார்கள். தேர்விற்கு நிற்பவர்கள் யார்யார் என்பது கூட்டம் ஆரம்பமான பிறகு எல்லோருக்கும் கொடுக்கப்பட்ட தட்டெழுத்துக் குறிப்புக்களிலிருந்து தான் தெரிந்து கொள்ளமுடிந்தது. நிற்பவர்களுடைய பெயர்களும் அறிவுமுறையில் அவர்களைப் பற்றிய செய்திகளும் கொண்டது தான் குறிப்புக்கள், எவரும் ஓட்டு வேட்டை ஆடவில்லை. குறிப்புக்களின் பேரில் நிர்வாகக் குழுவினைத் தேர்ந்தெடுத்தோம் என்னுடைய ஒப்பிலக்கிய ஆசிரியர்களில் ஒருவரான வைஸ்டைன் அவர்கள் தேர்விற்கு நிற்கிறார் என்று ஒருமுறைகூட அவர் என்னிடம் கூறவில்லை. பட்டியலைப் பார்த்து தான் தெரிந்து கொண்டேன். அவ்வளவு

நாகரிகமாகத் தேர்தல் நடந்தது. பேராசிரியர் வைஸ்டனை நிர்வாகக் குழுவிற்குத் தேர்ந்தெடுத்த பேராளர்களில் நானும் ஒருவன் என்பதில் எனக்கு ஒரு ஆத்ம திருப்தி. பின்பு நாங்களிருவரும் நான் ஒப்பிலக்கியம் பயின்ற இந்தியானா பல்கலைக் கழகத்தில் பல முறை சந்தித்த பொழுதும் தேர்தலைப் பற்றி நான் மூச்சு விடவில்லை. அது தான் அத்தகைய அறிஞர்களுடைய நடைமுறை நாகரிகம் என்று நினைக்கிறேன்.

அன்று பிற்பகல் நடந்த பேராளர்கள் கூட்டத்தில் அவர்கள் படித்த கட்டுரைகளைப் பற்றிய சுருக்கமான அறிக்கைகள் எங்களுக்கு அளிக்கப்பட்டன, அன்றிரவு எட்டுமணிக்கு இளவரசர் ஜார்ஜ் ஹோட்டலில் ஜான் பிராடமெஸ், ரெனெ வெல்லக், ஷாக்கில்டன் (ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்) ஆகியோர் அனைத்துலக ஒப்பிலக்கிய மாநாட்டிற்கும் பேராளர்களுக்கும் வாழ்த்துரைகள் வழங்கிய பிறகு, விருந்துடன் கூட்டம் கலைந்தது.

**பக்தி பெறும் வழி:-**

இல்லறம் தண்ணீர் போன்றது. மனம் பால் போன்றது. பாலாகிய மனத்தைத் தண்ணீராகிய இல்லறத்தோடு கலந்தால் அது தண்ணீரோடு ஒன்றாகக் கலந்து விடும். பிறகு சுத்தமான பாலைத் தனியாகப் பிரிப்பது கடினம். ஆனால், பாலைத் தயிராக்கி அதிலிருந்து வெண்ணெயை எடுத்து அவ்வெண்ணெயைத் தண்ணீரில் வைத்தால் அது மிதக்கும். ஆகவே தனிமையில் சாதனை செய்து முதலிலே ஞானம், பக்தி என்ற வெண்ணெயைக் கடைந்து எடு. அந்த வெண்ணெயை இல்லறம் என்ற தண்ணீரில் வைத்தாலும் அது தண்ணீரோடு ஒன்றாது; மிதந்து கொண்டிருக்கும்.

இதோடுகூட ஞானவிசாரம் செய்வதும் மிக அவசியம். பெண்ணும் பொன்னும் நிலையற்றவை. ஈசன் ஒருவனே உண்மையான வஸ்து. பணம் என்ன செய்யும்? அது நமக்கு உணவு, உடை, இருக்க இடம் முதலியவற்றைத் தரும்; அவ்வளவுதான். ஆனால் அது நமக்கு இறைவனைத் தராது. ஆகவே வாழ்க்கையின் நோக்கம், ஒருபொழுதும் பணம், காசாக இருக்க முடியாது. இப்படி ஆராய்வதுதான் ஞானவிசாரம்.

— ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

# டில்லிப் பயணம்

—பழனி அரங்கசாமி
மதுரைப் பல்கலைக்கழகம்

வெளிநாடு சென்று வந்தவர்களே பயணக்கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிற காலம். விண்வெளிப் பயணம் பற்றி எழுதினால் புதுமையாக இருக்கும். நம்நாட்டிற்குள்ளேயே டில்லிக்குச் சென்று வந்ததைப் பற்றி எழுதவேண்டுமா என்ற கேள்வியை நானே கேட்டுக் கொண்டேன். இருப்பினும், வைகையிலிருந்து யமுனைக் கரை வரை ஆயிரம் மைல் பயணம் செய்து பல்வேறு மாநிலங்கள், மொழிகள், ஆங்காங்கே ஏற்பட்ட அனுபவங்கள் இவற்றை யான் உணர்ந்தபடி பிறருடன் பகிர்ந்து கொள்ளவேண்டும் என்ற எனது ஆர்வமே இக்கட்டுரை. சென்னையிலிருந்து முப்பத்தெட்டு மணி-நேரத்தில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் தாமதம் இன்றி என்னை டில்லியில் கொண்டு வந்து சேர்த்து விட்டது. திரும்பி வந்தபோது கிடைத்தது போல, சென்னையை டில்லியோடு இணைக்கும் தமிழ் நாடு எக்ஸ்பிரஸ் இப்போதும் கிடைத்திருந்தால், ஆறுமணி நேரம் முன்னதாகவே சென்றிருக்கலாம். இந்தியாவில் அதிவேகமாகச்-செல்லும் துரித வண்டிகளில் தமிழ்நாடும் ஒன்று. மணிக்கு 120 கிலோ மீட்டர் வேகம் நமது ரயில்வே பெற்றுள்ள சாதனை. ஜப்பானில் ரயிலின் வேகம் 360 கிலோ மீட்டர்.

சென்டிரல் ரயில் நிலையத்தில் வழக்கம் போல கூட்டம். பரபரப்பு. சத்தம். ஒருவழியாக ரயிலில் ஏறி அமரும்போது எனக்கு ஒரு வரவேற்பு. நிமிர்ந்து பார்த்தேன். நான் கலந்து கொள்ளச்-செல்லும் அகில இந்திய ஆங்கில மாநாட்டில் பங்கு பெற வருகின்ற நண்பர்கள் கூட்டம். பயணம் அலுப்பின்றிச் செல்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பு. ஒரு பத்திரிகையாளரும் இக்கூட்டத்தில் இருந்தார். சென்னையிலிருந்து ஒரு மணி நேரத்தில் கூடூர்; பிறகு ஆந்திர மாநிலம். நில அமைப்பிலும், உழவுத் தொழில் செய்கின்ற முறையி-லும், உடையிலும் தமிழகத்தினின்று அதிகம் வேறுபாடில்லை. ஆளு-கின்ற கட்சியோ இந்திரா காங்கிரஸ். தற்போது அங்கு நடக்கின்ற தேர்தலில் அங்குள் ஆட்சி ஒரு நடிகரின் கைக்கு மாறி விடுமோ என்று எண்ணிக்கொண்டே இரவு உணவு முடித்தேன். மேல் தட்டில் நல்ல உறக்கத்தில் இருந்த போது திடீரென்று 'கடமுடா' சப்தம். ஏக இரைச்சல். ரயில் வண்டியே குலுங்குவது போன்றிருந்தது.

கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு மணி ஒன்று. 'கடமுடா' ஒலியின் காரணம் விளங்கி விட்டது. ஏறத்தாழ அரை மைல் அகல-முள்ள கிருஷ்ணா நதியை ரயில் கடக்கும் போது ஏற்படுவதே அந்த சப்தம். ஓரிரு நிமிடங்களில் ரயில் விஜயவாடா சந்திப்பில் நின்றது. கிருஷ்ணாவும், கோதவரியும் ஆந்திர மாநிலத்தின் முக்கியமான ஆறுகள். இயற்கையின் கருணை நீராகப் பெருக்கெடுத்து ஓடும் இந்த வளமான நதிகளில் கிருஷ்ணாவின் நீரைத்தான் தமிழகத்தின் தலைநகரம் தற்போது நம்பிக் கொண்டிருக்கிறது. பல கோடிகளைத் தின்று ஏப்பம் விட்ட வீராணம் வெளியிலே தள்ளப்பட்டு விட்டது. கிருஷ்ணா நதி தெற்கு நோக்கியும் பாயுமா என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஆந்திராவின் நெல்லூர் அரிசி சென்னையில் கிடைக்கிறது. ஆந்திராவில் நெல்லும், கரும்பும், வாழையும் மிகுதி. ஆயினும் அம்மாநிலத்தின் ராயலசீமா மிக வறண்ட பகுதி. அனந்தப்பூர், கடப்பை, கர்நூல் மாவட்டங்களை உள்ளடக்கிய இங்கு நிலவும் ஏழ்மையையும், வறுமையினையும் மூலதனமாக வைத்துத் தான் பொதுவுடைமையினர் தெலுங்கானா கலவரங்களை உண்டுபண்ணிப் பார்த்தனர். இந்தப் பகுதியின் ரயில் செல்லுகின்ற தோர்ணக்கல், காஜிபேட், ஆகியவை சிறுநகரங்கள். தொடர்ந்து வருகின்ற ராம-குண்டம், கோத்த கூடம் கனிவளம் மிகுந்தவை. ராமகுண்டம் கோதாவரிக் கரையில் உள்ளது. வழக்கத்திற்கு மாறாகக் கோதாவரி இம்முறை வறண்டு கிடந்தது. முறை வைத்து நீர் விடுகிறார்களோ என்று எண்ணினேன். கோதாவரியினை ரயில் வண்டி தாண்டும் போது, கம்பன் எனது நாவில் நடமாடினான்.

> ''புவியினுக்கு அணியாய் ஆன்ற பொருள் தந்த புலத்திற்றாகி
> அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிக்
> கவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் படிந்து
> சான்றோர்
> கவியெனக் கிடந்த கோதாவரியினை வீரர் கண்டார்''

— நான் பாடி முடித்தேன். நண்பர் கேட்டார்.

''ஆயினும் கங்கையினையும் காவிரியினையும் இணைத்தவன் பாரதி அல்லவா?''

''ஆழநீர்க்கங்கை அம்பி கடாவிய ஏழை வேடனைத் தன் இராமகதையில் ஏற்றிக் காட்டிய கம்பனே ஒருவகையில் இப்பணியைச் செய்துள்ளானே!'' — இது நான்.

''காவிரிக் கரையில் வாழ்ந்த ராஜேந்திர சோழனுக்கே கங்கை கொண்ட சோழன் என்பதும் ஒரு பெயர் என்பதை மறந்து விடாதீர்கள்'' — இதுவும் ஒரு பதில்.

கால ஆராய்ச்சியை விடுங்கள். ''வயிற்றுக்குச் சோறில்லை கண்டீர் — இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம்.'' என்று சொன்ன பாரதியை நினைத்துப் பாருங்கள்.

— நடைமுறை உலகத்தைக் காணுகின்ற பத்திரிகையாளரின் பதில் இது.

ஓடிக்கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் வேகம் குறைந்தது. பிறகு மெள்ள நகர்ந்தது. நாஞ்சிர்யால் என்ற சிறு ஜங்ஷன். இங்கு எங்கள் விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. எங்கள் அனைவரையும் கவர்ந்த ஒரு நிகழ்ச்சியே இதற்குக் காரணம். பார்வைக்குத் தமிழ்ப் பெண் போலத் தோற்றம். பன்னிரண்டு வயது இருக்கலாம். கணீரென்ற குரலில் கை நீட்டிக் கெஞ்சினாள். ''சோட்டா பச்சா தஸ் பைசே தே தோ'' — இது இந்தி. மதுரை நண்பர் தமிழில் ஏதோ கேட்டார். தெலுங்கில் அந்தக் குழந்தை பதில் சொல்லிற்று. எந்த மொழியிலாவது பேசி சில்லறையை வாங்கி விடும் ஆர்வம் தெளிவாகத் தெரிந்தது. வறுமை வாட்டும் போது மொழிப் பிரச்சினைக்கு இடம் ஏது? பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டோர் கோடிக்கணக்கானவர் வாழும் நாடு அல்லவா இந்தியா! பிச்சைக்காரர்களே இல்லாத ஒரு நாட்டினை உருவாக்க முடியாதா? முடியுமென்றால், அதற்குரிய வழிவகைகள் என்ன? இந்தச் சிந்தனையில் ஈடுபட்டுச் செயல் புரிய ஒரு புதிய காந்தி பிறக்க வேண்டுமா?

ஞாயிறு காலை எட்டரை மணியளவில் ரயில் நின்ற இடம் சிர்பூர் காகஸ் நகர். ரயில் நிலையம் சிறியது தான். ராயல் சீமாப் பகுதி. மண்வளம் இல்லை. ஆயினும் தொழில் வளம் உண்டு.

ஆயிரக்கணக்கான ஏழைத் தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புத் தருகின்ற பேப்பர் தொழிற்சாலையும், சில்க் ஆலையும் இங்கு உள்ளன. காகஸ் என்றால் பேப்பர். இந்தத் தொழிலகங்கள் டாட்டாவிற்குச் சொந்தமானவை. இங்கிருந்து ரயிலில் பயணம் செய்யும் போது இருபுறமும் செம்பழுப்பு நிறமான கல்லும், காடும் தெரிகின்றன. நில அமைப்பு மேடுபள்ளமாக இருப்பதனால் முறை-யான வேளாண்மை இல்லை. இருப்பினும், தேக்கு, மூங்கில் இவற்றோடு பல்வகையான காட்டு மரங்களும் ஏராளமாக மண்டிக்-கிடக்கின்றன. சிற்சில பகுதிகளில் திட்டுத்திட்டமாக விவசாயம் நடக்கிறது. புஞ்சைப் பயிரான சோளம், கம்பு ஆகியவை பயிரிடப்-பட்டுள்ளன. ஏறத்தாழ எல்லாக் கொல்லைகளிலும் பரண் கட்டிக் குருவியோட்டுகிறார்கள். கொல்லைகளுக்குச் செல்லும் வண்டிகளை எருமைகளும் இழுத்துச் செல்கின்றன. வண்டிச் சக்கரங்கள் அளவில் மிகச்சிறியவை. தமிழ்நாட்டில் காணப்படுவது போன்று மிகப்பெரியவை அல்ல. சிறிய சக்கரங்களினால் மாடுகளுக்கு இழுப்புச் சக்தி அதிகம் கிடைக்குமாயின், நம்பகுதிகளிலும் ஆந்திர முறையினைப் பின்பற்றிப்-பார்க்கலாம்.

மராட்டிய மாநிலத்தில் முதலில் வருவது பல்ஹர்ஷா. இது ஒரு மாவட்டத் தலைநகரம். தேக்கு மரத்துண்டுகளும், பலகைகளும் இங்கு மலிவு. இதுவும், அடுத்து வருகின்ற சந்திரப்பூரும் நிலக்கரி வளம் மிகுந்தவை. சந்திரப்பூர் பழையநகரைச் சுற்றி மைல் கணக்கில் பத்தடி உயரத்தில் கற்களாலான மதிற்சுவர் கட்டப்பட்டுள்ளது. கோண்டவனப்பகுதியான அதனைத் தலைநகராகக் கொண்டு வெள்ளையராட்சிக்கு முன்பு வீர்ஷா காண்டக பல்லா என்பான் ஆண்டிருக்கிறான். பாதுகாப்புக்காக அவன் கட்டிய கோட்டை மதிற்சுவர் இன்று வரலாற்றுச் சின்னமாக விளங்குகிறது. பழம்-பெருமை வாய்ந்த இப்பகுதியில் நிலக்கரியும், வெள்ளைக் களி-மண்ணும் கிடைப்பதனால் மூன்று சிமெண்ட் ஆலைகள் உள்ளன. மராட்டிய அரசின் சார்பில் ஒரு சிறிய எஃகுத் தொழிற்சாலை ஒன்றும் தொடங்கப்பட உள்ளது. ரயில்பயணம் தொடர்ந்தது.

வார்தா, சேவாகிராமம் ஆகியவை காந்தி அடிகளாரின் அடிச்-சுவடு பட்ட இடங்கள். சபர்மதிக் கரையில் வார்தா நகரத்தில் தான் காந்தி தனது ஆசிரமத்தை அமைத்தார். சமுதாயத்தில் சாதி-வேற்றுமை கூடாது; எந்த வேலை செய்யினும் அதில் இழிவு இல்லை என்ற கருத்துடனே தொடங்கப்பட்டது இந்த ஆசிரமம்.

இதனைச் செயற்படுத்தும் பணியில் ஒன்று தான் கழிவறையைத்-தூய்மைப்படுத்துதல். காந்தியின் மனைவியார் கஸ்தூரிபாய் ஒரு நாள் இதனைச்செய்ய வேண்டியிருந்தது. அம்மையார் மறுத்தார். அடிகளார் விடவில்லை. பணியினைச் செய்து முடிக்கும் வரை வீட்-டிற்குள் வாராதே என்று நடுக்கும் குளிரில் வெளியில் நிறுத்தி-விட்டார். கணவன் இட்ட கட்டளையை மனைவியர் மதித்த காலம் அது. ஏழ்மை நீக்குதற்கு எளிய தொண்டும் இறைபணியும் செய்-வதைக் கடைசி மூச்சு வரை விடாத காந்தி அடிகளார் விட்டுச் சென்ற சொத்து காந்தி நிதி நிறுவனமாக இன்று பயன்படுகிறது. இந்த எண்ணத்தில் மூழ்கிக் கிடந்த என்னை ஆரஞ்சுப்பழத் தள்ளு-வண்டிகள் கவர்ந்தன. பெரிய கமலா ஆரஞ்சு விலை இருபது பைசா மதுரையில் அறுபதுபைசாவிற்கு விற்கலாம். நாகபுரியிலும், அதனைச் சுற்றிலும் ஆரஞ்சுத் தோட்டங்கள் இருப்பதே இதற்குக் காரணம். ரயிலின் இருபுத்திறலும் பசிய இலைபடர்ந்த குட்டையான ஆரஞ்சு மரங்களில் மஞ்சள் மஞ்சளாக ஆரஞ்சு பழுத்துத் தொங்குவதைப் பார்ப்பது கண்ணுக்கு விருந்து.

மராட்டிய மாநிலத்தின் முக்கிய நகரமான நாகபுரி தொழிலிலும், கல்வியிலும் வளர்ந்து வருகின்ற பெருநகரம். இதனைத் தலை-நகராகக் கொண்ட விதர்ப்ப நாடு அமைக்க வேண்டும் என்று ஆனே போன்ற மராட்டியத் தலைவர்கள் ஒரு காலத்தில் போராடிப் பார்த்து ஓய்ந்து போனார்கள். ரயில் நாகபுரி சந்திப்பினைக் கடந்ததும், இருபுறமும் ஆரஞ்சுத் தோட்டங்களும் அவற்றின் நடுவே ஊடு பயிராகக் கோதுமை நாற்றும் நட்டிருக்கிறார்கள். சமவெளியாக இல்லாததால், ஆறுகளையும், வாய்க்கால்களையும் காணமுடிய வில்லை. பழுப்பு நிற இலைகள் நிறைந்த தேக்கு மரங்களும், காட்டு மரங்களும் நிறைந்த வனப்பகுதி மண்டிக்கிடக்கிறது. சில இடங்களில் குடைந்து வைக்கப்பட்டுள்ள பல மலைகளினூடு புகுந்து இருண்ட குகைகளைக் கடந்து ரயில் செல்கிறது. பகல் நேரமாக இருந்தாலும், வண்டிகளில் மின் விளக்குகள் எரிகின்றன. ஒரு குடைவரைப் பாதையின் நீளம் 937 அடி. மாலை நேரத்தில் ரயில் வேயின் இருபுறத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தெரிகிற மராட்டிய மாநிலச் சிறு கிராமங்கள் ஏழ்மையைத் தான் காட்டுகின்றன.

மூன்றடி அல்லது நான்கு அடி உயரமுள்ள மண்சுவர், சாணம் போட்டு மெழுகப்பட்டுள்ளது. பொடிந்து போய்த் தூசி படிந்த நாட்டு ஓடுகள். குட்டை குட்டையான சக்கரங்களைக் கொண்ட

வண்டிகளை இழுத்துச் செல்லும் மாடுகள். இவற்றுக்கு முன்னும் பின்னும் முண்டாசு கட்டிய விவசாயிகள். ஒட்டு மொத்தமாக இவற்றை நோக்கும்போது நீர்வளமும் நிலவளமும் கொண்ட தமிழகத்துக் கிராமங்கள் பன்மடங்கு சிறப்புடையவை என்று சொல்லலாம்.

அம்லா சந்திப்பினைத் தாண்டியதும் புஞ்சைநில உழவு என் கண்ணில் பட்டது. நுகத்தடி போன்ற மரக்கட்டையின் முன் இரண்டு கொழுக்கள் இலேசாக மண்ணைத் தோண்டுகின்றன. அப்பலகை-யின் மீதேறி உழவன் நின்றுகொண்டு மாடுகளை ஓட்டுகிறான். சேறும் சகதியும் நிறைந்த நன்செய் உழவுக்கு இம்முறை பொருந்தி வராது. நீரற்றபகுதிகளில் கோதுமை வயல்கள் இளம்பயிராக இருக்-கின்றன. கடுகு, துவரை, சோளம் போன்ற புஞ்சைப் பயிர்கள் முதிர்ந்தும், விளைந்தும் காணப்படுகின்றன. இந்தப் புஞ்சைநில வேளாண்மை தொடர்ந்து காணப்படவில்லை. சுற்றிலும் மலைகளே தெரியாதபடி தேக்கு மரக் காடுகளும், ஆழ்ந்த பள்ளத்தாக்குகளும், ஆங்காங்கே இலேசாகத் தண்ணீர் ஓடுகின்ற சிற்றோடைகளும், கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றன. மத்திய மாநிலத்தைச்-சார்ந்த இங்கும் கூட மூன்று நான்கு இடங்களில் குடைவரைப்-பாதையில் ரயில் செல்கிறது.

வாரணாசி, கயா, அலகாபாத் போன்ற இடங்களுக்கு ரயில் மாறவேண்டிய இடார்சி சந்திப்பு வருகிறது. ரயிலடியில் வண்டி நின்றதும், கேலே, கேலே என்றும் சோலே சோலே என்றும் சப்தம். முண்டிஅடித்து ஓடுகின்ற மக்கட் கூட்டம். புரியாத மொழியில் கூச்-சல். கேலே என்றால் வாழைப்பழம், சோலே என்றால் சுண்டல். அனேகமாக இந்தப்பகுதியில் எல்லா இடங்களிலும் முதிர்ந்த பச்சை வாழைப்பழம் கிடைக்கிறது. வேகவைத்த சுண்டலை இங்கு விற்-கின்ற விதமே வேறு. கறிமசால் போட்டுக் குழம்பாகவும் இல்லை. உப்புபோட்டு வேகவைத்துத் தாளிதம் செய்து விற்பதும் இல்லை. வேகவைத்த சுண்டல் கூடையில் இருக்கிறது. அதன்மேலே வெங்கா-யம், தக்காளி, கொத்தமல்லிஇலை, முள்ளங்கி ஆகியவற்றைப் பரப்பி வைத்துள்ளார்கள். இரண்டு இலைகளால் தைக்கப்பட்ட தொன்னை அல்லது கையடக்கமான காகிதத்தை எடுத்துச், சுண்டலை வைத்துப் பொடிசெய்த கொத்தமல்லி இலை, வெங்காயத் துண்டு, பச்சைமுள்ளங்-கித் துண்டு, தக்காளி உப்புத்தூள் இவற்றைப்போட்டுக் குலுக்கி,

எலுமிச்சஞ்சாற்றை அதில் பரவலாகப் பிழிந்து மறுபடியும் ஒரு குலுக்குக் குலுக்கிக் கையில் கொடுக்கிறார்கள். ரயில் சந்திப்பின் நெடுகிலும் மண்எண்ணை அடுப்பிலும், வாணலியிலும் சுடப்படுகின்ற சூடான பூரியும், உருளைக்கிழங்கு காரக்குழம்பும் நிறைய விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. வேகவைத்த முழு முட்டையினை வெள்ளை வெளேர் என்று அழகாக அடுக்கி வருகிறார்கள். கேட்ட மறுகணமே ஒரு காகிதத்தில் உப்பு, மிளகுத்தூளுடன் முட்டையினை நம் கையில் கொடுத்து விடுகின்றனர். விலை அறுபது காசுகள்தான். புகை வண்டியிலேயே உணவு வாங்கி உண்ணலாம் என்றாலும், பலர் இப்படிப் பெரிய ரயில் நிலையங்களில் சூடாகவும் சுவையாகவும் வாங்கி உண்பதையே விரும்புகின்றனர்.

அடுத்து வருகின்ற போபால் மத்திய பிரதேசத்தின் தலைநகர். மாணவனாக இருக்கும்போதும் டில்லி சென்றுள்ளேன். போபால் ரயில் நிலையத்துக்கு எதிரே மண்குடிசை வீடுகளும், ஒட்டக வண்டிகளும் பார்த்த நினைவு இன்னும் மாறவில்லை. இப்போது வானளாவிய கட்டிடங்களும், புதிய காலனிகளும் ஏற்பட்டுள்ளன கல்லூரிகளும், தொழிற்கூடங்களும் பெருகியுள்ளன. நாட்டைவிட்டு வறுமையினை முற்றுமாக ஓட்ட முடியவில்லை என்றாலும், ஒருவகையில் நாடு தழுவிய வளர்ச்சி இருப்பதையும் மறுக்க முடியவில்லை. தொடர்ந்து மலைகளும் காடுகளும் காணப்பட்டாலும், போபாலைச் சுற்றி மட்டும் கோதுமை வயல்கள் நிறைய காணப்படுகின்றன.

குவாலியர், ஜான்சி போன்ற நகரங்களில் மண்வளம் இல்லை. வறண்ட பகுதி, ஏரி, குளங்களை நினைத்துப் பார்க்க முடியாது. ஆயினும் இந்த நகரங்கள் இரண்டும் வரலாற்றில் இடம்பெற்றவை. ஜான்சி ராணி லட்சுமிபாய் கட்டிய கோட்டை தூரத்தில் தெரிகிறது ஆணுடை தரித்து, அரச வாரிசான குழந்தையைக் கையில் எடுத்துக்கொண்டு ஓர் கையில் வாளுடன் வெளியேறி, எதிர்ப்பு வந்தபோது அஞ்சாமல் போரிட்டு மாண்ட அந்த வீராங்கனையின் வரலாறு இப்போது படிக்கும்போதும் மயிர் சிலிர்க்கிறது. குவாலியரை ஆண்ட சிந்தியா பரம்பரை வெள்ளையருடன் ஒத்துப்போனதனால் கோட்டை கட்டிவாழ முடிந்தது. நாடு விடுதலை பெற்றதும், சர்தார் பட்டேல் குவாலியரை இந்தியப் பெருநிலத்தோடு ஒன்றாகச் சேர்த்து விட்டார். அண்மைக்காலம் வரை அரசியலில் ஈடுபட்டுச், சுதந்திராக் கட்சியில்

இருந்த குவாலியர் ராஜமாதா சிந்தியா பான்ஸ்லே இப்போது எந்தக் கட்சியில் இருக்கிறார் என்று தெரியவில்லை.

அதிகாலை 4 மணியளவில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் ஆக்ரா-வில் நின்றது வெளியில் தலை காட்ட முடியாதகுளிர். தண்ணீரைத் தொட்டால் மின் அதிர்ச்சி பட்டது போல் உடம்பே நடுங்குகிறது. டில்லியின் குளிர் ஆக்ராவிலேயே தொடங்கி விட்டது. ஆக்ரா என்றதும் அனைவருக்கும் தாஜ்மகால் நினைவுக்கு வரும். அச்சலவைக்கல் கட்டிடத்தின் பூரணமான அழகை முழு நிலவொளியில் பார்க்கவேண்டும் என்று சொல்வார்கள் ஒன்றை மட்டும் நினை-விற் கொள்ள வேண்டும். தாஜ்மகாலின் அழகைக் கற்பனை செய்து கொண்டிருப்போர் அதனை நேரில் சென்று பார்க்காமல் இருப்பதே நல்லது. பார்த்தால் கற்பனையாக எண்ணியிருந்த அழகு உணர்வு இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும். அழுக்கு படிந்த நடை-பாதை. அருகிலே வறண்டு கிடக்கும் யமுனை நதி. கண்ணாடிக் கற்களும், மரகதக் கற்களும் பேர்த்தெடுக்கப்பட்டதால் தேய்ந்து கிடக்கும் சுவர்கள். லேசான பழுப்பு நிறம் பரவிய சலவைக் கற்கள். இவைதான் இன்றைய தாஜ்மகாலின் நிலைமை. மதுரா நகரத்துக்-கழிவுநீர்ச் சாக்கடையாக யமுனைநதி மாறி விட்டதனால், தாஜ்-மகாலின் ஒரு பக்கத்துச் சுவர் மக்கி, விண்டு, சில ஆண்டுகளில் இடிந்து விடுமோ என்ற அச்சம். நடப்புநிலை இப்படி இருந்தாலும், சம்பிரதாயமாக இந்தச் சமாதியைக் காண வருகின்ற வெளிநாட்டு, உள்நாட்டுக் கூட்டத்திற்குக் குறைவில்லை. ஆக்ராவில் உள்ள செங்-கோட்டை பாழடைந்துபோன இன்னொரு கட்டிடம். இப்பகுதியில் மயில் இறகினால் செய்த விசிறி நிறைய கிடைக்கும். இந்த விசிறியில் காற்றுவராது. வேகமாக விசிறினால் மயிலிறகு பிய்ந்து விடும். வெறும் டம்பப் பொருள் தான். சமாதியையே அலகுப் பொருளாகப் பார்க்கும்போது மடிந்துபோன மயில்களின் இறகைக் கைவிசிறியாக்கி அழகுப் பொருளாக வைத்திருப்பதில் ஆச்சரியம் இல்லை தான்.

துவாரகை என்று புராணங்களில் பேசப்படும் மதுரா நகரமே அடுத்து வருகின்ற பெரிய ரயில் நிலையம். கண்ணனுக்கென்று இங்கு ஒரு கோயில் உண்டு. டில்லியிலிருந்து எண்பது மைல் தூரத்தில் உள்ள இந்நகரத்துக்கு வருவோர் அனைவரும் ஆக்ரா செல்லாமல் திரும்புவதில்லை. ஆக்ராவுக்கும், மதுராவுக்கும் அன்-றாடம் நூற்றுக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை அழைத்துச்

செல்வதையே பிழைப்பாகக் கொண்டுள்ள பேருந்துக் காரர்கள் டில்லி-யில் பலர் உள்ளனர். இவர்களைக் கரோல் பாக், பழைய டெல்லி பகுதிகளில் சந்திக்கலாம்.

இந்தியத் தலைநகரம் டில்லி. முகலாயர் காலத்துக்கு முன்னும் பின்னும் பல்வேறு தடவைகள் அழிக்கப்பட்டும், தீயூட்டப்பட்டும் சிதைந்து போன நகரம். ஆயினும் 12-ஆம் நூற்றாண்டு முதல் ஒவ்-வொரு முறையும் புத்துயிர் பெற்று எழுந்து தலைநகராகப் பரிமளித்த தொன்னகரம் விடியற்காலையில் அந்நகரத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறோம். பனிமூட்டம் இன்னும் கலை-யவில்லை. ஏறத்தாழ இருபது மைல்களுக்கு முன்னால் பரீதாபாத் என்னும் தொழில் நகரம் வருகிறது. அரியானா மாநிலத்தின் ஒருமா வட்டம் இது. பற்பல தொழிற் பேட்டைகளும், அட்லாஸ் சைக்கிள் தொழிற்சாலையும் டிராக்டர் செய்யுமிடமும் இங்கு தான் உள்ளன. தண்டவாளத்தின் இருபுறங்களிலும் வரிசையாக நூற்றுக்கணக்கான குடிசைகள். தகரத்தாலும், பிய்ந்து போன சாக்குகளாலும் வேயப்பட்ட இக்குடிசைகளில் தான் ஆயிரக்-கணக்கானவர் வசிக்கிறார்கள். எல்லா நாடுகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள் ஆனால் நமது நாட்டில் தான் ஏழைக்கும் பணக்-காரனுக்கும் உள்ள இடைவெளி மிக அதிகமாக உள்ளது. இதனை நிரவல் செய்து ஓரளவேனும் சமத்துவம் காணுகின்ற குடியாட்சி நமது நாட்டில் வரவே முடியாதா? இந்திய நாட்டில் தலைநகரத்துக்கு மிக அருகிலேயே இப்படி வறுமையின் கொடுமையா என்று எண்-ணிக் கொண்டே பயணம் செய்தேன். பனியின் வாடையும் குளிரும் வெளியில் தலைநீட்டமுடியவில்லை. குடிசைகளுக்கு வெளியே அங்கும் இங்குமாகக் கட்டப்பட்டிருக்கும் எருமைகளின் முதுகினைக்-கூட சாக்குத் துண்டுகளால் போர்த்தியிருக்கிறார்கள். இந்தக் கடுங்-குளிரைப் போக்க சூரியன் வாராதா என்று எண்ணிக் கொண்டிருக்-கும் போதே பெருமூச்சு விட்டுக் கொண்டே வந்த எக்ஸ்பிரஸ் டில்லி ஸ்டேஷனுக்குள் வந்து நின்றது.

(தொடரும்)

# அரையர் சேவை

டாக்டர் சு. வேங்கடராமன்,

*அறிமுகம் :* 'அரையர் சேவை' என்பது வைணவ ஆலயங்களில் இறைவனின் (உற்சவரின்) முன்பு பாடப்பெறும் கலை. ஆழ்வாரின் பாசுரங்களை இசையுடன் பாடி, அபிநயித்து, அவற்றின் வியாக்யானங்களைக் கூறும் இக்கலைஞர் அரையர் எனப்படுவர். அரையர் என்பது அரசர்-அரைசர் என்று பொருள்படும். இவர்கள் இப்பாசுரங்களுக்கு அரசர் ஆவர். இவர்கள் பாசுரங்களைச் சொல்வதால் (அறைதல்-சொல்லுதல்) அரையர் (அறையர்) என்று அழைக்கப் பட்டனர். இவர்களை விண்ணப்பஞ்செய்வார், 'நம்பாடுவான்' என்று கோயிலொழுகு என்ற நூலும் குருபரம்பரைக் கல்வெட்டுக்களும் கூறுகின்றன. ஸ்ரீரங்கத்திலுள்ள இறைவன் நம்பெருமாள் இவர்களுக்கு அரையர் என்ற பட்டத்தை அளித்தார்.

பாசுரத்தை இசையுடன் பாடுதல், பாசுரத்திற்கு அபிநயஞ்செய்தல், பாசுரத்திற்கு வியாக்யானம் சொல்லுதல், கொண்டாட்டம் என்ற பிரிவுகளாக இக்கலை அமையும். கொண்டாட்டம் என்பது இறைவனின் புகழ்பாடுதல் ஆகும். அரையர் கூறும் வியாக்யானம் 'தம்பிரான்படி' என்று அழைக்கப்பெறும். அரையர் தம்பிரான்மார் எனப்படுவதால் அவர்களின் உரை இப்பெயர் பெற்றது. இவ்வுரை இன்றுவரை அச்சாகாமல் அரையர்களிடம் ஏட்டுச்சுவடியாக உள்ளது.

*கலையின் தோற்றம் :* இக்கலையின் தோற்றம் பற்றிக் கோயிலொழுகு பின்வருமாறு கூறுகிறது. திருமங்கையாழ்வார் திருவரங்கம் ஆலயத்தில் இறைவன்முன், ஒரு திருக்கார்த்திகை மஹோத்ஸவத்திலே 'திருநெடுந்தாண்டகம்' பிரபந்தத்தைப் பெருமாள் திருச்செவி சாத்தும்படி தேவகானத்திலே ஏறியிட்டு அபிநயித்து அநுசந்தித்தார். பின்னர் அவா பெருமாளிடம் மார்கழி மாதத்தில் சுக்லபட்ச ஏகாதசியன்று அத்யயநோத்ஸவம் கொண்டருளும்போது நம்மாழ்வாரின் திருவாய்மொழியை வேதங்களுடன் கேட்டருளி வேதஸாம்யமாக அநுக்ரஹித்தருளவேணும் என்று விண்ணப்பித்தார். பெருமாளும் அதற்கிசைந்தார். அன்றுமுதல் ஆழ்வார் திரு-

நகரியிலிருந்து நம்மாழ்வார் விக்ரகத்தை மார்கழிமாத சுக்ல தசமி யன்று ஸ்ரீரங்கம் கோயிலுக்கு எழச்செய்தனர். மதுரகவியாழ்வார், நம்மாழ்வாரின் பிரதிநிதியாயிருந்து திருவாய்மொழியைத் தேவ- ானத்தில் இசைத்து அபிநயித்தார். இவ்வுற்சவம் பத்துநாள் நடைபெற்றது ஆண்டுதோறும் இவ்வாறு நடைபெற்ற இந்த உற்சவம் இடையில் தடைப்பட்டது.

நாதமுனிகள் (கி.பி. 10 ஆம் நூற்றாண்டு) ஆழ்வார்களின் பாசுரங்களை நாலாயிர திவ்வியப் பிரபந்தமாகத் தொகுத்தார். திருமொழித்திருநாள் (பகல்பத்து) விழாவை மார்கழியில் தொடங்கி- வைத்து. அந்நாட்களில் முதலாயிரம், திருமொழி ஆகியவற்றை யும் திருவாய்மொழித் திருநாளில் (இராப்பத்து) திருவாய்மொழி- யையும் தேவகானத்திலே ஏறியிட்டு மதுரகவியாழ்வாரைப்போல் அபிநயத்துடன் சேவித்தார். இவ்வாறு பலகாலம் சேவித்துத், தம் மருமக்களான கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ்வான் ஆகிய இருவருக்கும் ஆழ்வார்களுடைய திவ்வியப்பிரபந்தங்களை இசை- யுடன் சாதித்துத் தம்மைப்போல திருமொழி, திருவாய்மொழித் திரு நாட்களில் சேவித்துவரச் செய்தார் என்று கோயிலொழுகு கூறும். இவ்வாறு அரையர் சேவை என்னும் இக்கலை தொடங்கியது.

விழாவில் நன்றாகப் பாடிய இருவர்க்கும் (கீழையகத்தாழ்வான்- மேலையகத்தாழ்வன்) இறைவன் பட்டங்கள், குல்லா, தொங்கல் பரிவட்டமாகப் பட்டும் பருத்தியும், சாத்திக் களைந்த திருமாலைகளை யும் அளித்தான். இவற்றை அணிய பிற மக்களுக்கு உரிமையில்லை. அன்று முதல் இக்கலைஞர் அரையர் என்று பெயர் பெற்றனர்.

*நடைபெறும் முறை :* அரையர்சேவை இறைவனின் (உற்சவரின்) திருமுன் மட்டுமே நடைபெறுகிறது. மார்கழிமாதத்தில் வைகுண்ட ஏகாதசிக்கு முன் உள்ள பத்து நாட்களும் பகல்பத்து எனப்படும். இந்நாட்களில் (பகல்பத்து நாட்களில்) அரையர் சேவை பகலில் நடைபெறும். பெரியாழ்வார் திருமொழி, ஆண்டாள் திருப்பாவை, குலசேகரரின் பெருமாள் திருமொழி, தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருமாலை, மதுரகவியாழ்வாரின் கண்ணிநுண் சிறுத்தாம்பு, திரு- மங்கையாழ்வாரின் பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் ஆகியன சேவைக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். இது திருமொழித். திருநாள் எனப்படும். வைகுண்ட ஏகாதசி முதல் பின் உள்ள பத்துநாட்களும் இராப் பத்து எனப்படும். இந்நாட்களில் இரவில்

அரையர் சேவை நடைபெறும். இராப் பத்து முழுவதிலும் நம்மாழ்வாரின் திருவாய்மொழிப் பாடல்கள் சேவிக்கப்படும். இது திருவாய்மொழித் திருநாள் எனப்படும். ஒருகாலத்தில் தமிழக வைணவக் கோயில்கள் பலவற்றிலும் அரையர் சேவை நடைபெற்று. இன்று ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம் ஆகிய மூன்று இடங்களில் மட்டும் நடைமுறையில் உள்ளது.

அரையர் சேவைக்காகத் தனியே ஒப்பனை, உடை ஏதும் அவர் அணிவதில்லை. கூம்பு வடிவமுடைய குல்லாய் ஒன்றினை அரையர் தலையில் தரித்துள்ளார். இறைவன் உடுத்திக் களைந்த பீதக ஆடையைப் பரிவட்டமாகக் குல்லாயைச் சுற்றிக் கட்டி அணிந்துள்ளார். இறைவன் சூடிக்களைந்த இருமாலைகளை அரையர் அணிகிறார். கைகளில் இரு தாளங்களை அரையர் வைத்துள்ளார். தாளத்தை ஆழ்வார் என்றே அழைப்பார். ஆழ்வார் திருநகரியிலுள்ள அரையர் பயன்படுத்தும் தாளம் வடிவில் பெரியதாக உள்ளது. அந்தத் தாளம் நாதமுனி பயன்படுத்தியது என்று வைணவ மரபு கூறும். பாசுரங்களைப் பாடுகையில் அரையர் இந்தத் தாளங்களைத் தட்டி இசைப்பார். இவை தவிர, அரையருக்கு இக்கலைக்காக வேறு உடையோ, அணிகலன்களோ, துணை இசைக்கருவிகளோ கிடையா. பள்ளுப் பாட்டு பாடும்போது மட்டும் மிருதங்கத்தைப் பயன்படுத்துகிறார்.

சேவையினைத் தொடங்கும் போது, அரையர் முதலில் கொண்டாட்டம் ('மதியாத தெய்வங்கள் மணவாளப் பெருமாள்'. . .) சொல்லுகிறார். சேவையில் அன்று பாடும் பாசுரத்தை இசையுடன் பாடுகிறார். பாடும் போது கைகளில் உள்ள தாளத்தால் ஒன்றை மற்றொன்றில் தட்டிக் தாளமிட்டுக்கொண்ட இருக்கிறார். அடுத்து பாசுரத்தை அபிநயங்கள் மூலம் விளக்குகிறார். பாசுரத்தில் முழு விளக்கமும் இந்த அபியங்களில் வெளிப்படுகிறது. அபிநயஞ்செய்கையில் கால்களால் தரையில் தட்டி ஜதிசெய்து அபிநயிப்பது முதல் நிலை. கைகளால் காட்டும் முத்திரை, முகபாவம், கண்கள் அசைவு இவற்றால் அபிநயம் வெளிப்படுகிறது. முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் தாள அறுதியிட்டு நடப்பது, கைகளை இயக்குவது என்று இது நளினமாக வெளிப்படும் பாங்கை ஆழ்வார்திருநகரி அரையரிடம் காணமுடிகிறது. அடுத்தடுத்துவரும் நுட்பமான முகபாவங்களை இக்கலைஞர் வெளிப்படுத்துகிறார். ஸ்ரீரங்கத்தில் நின்ற இடத்தில் இருந்தே அரையர் அபிநயிக்கிறார்.

பாசுரத்தினைப் பாடுகையில் இரு அரையர்களும் பாடினாலும், ஒருவர் மட்டுமே (பெரியவரான தந்தை மட்டும்) அபிநயிக்கிறார். அப்போது மற்றவர் (இளையவரான மகன்) பாடுகிறார். அபிநயித்தபின், அரையர் வியாக்யானம் சொல்லுகிறார். இடையிடையே வரும் உரையாடல்களைக் குரலில் ஏற்றி இறக்கிப்பேசுகிறார். ஒருவரே பல பாத்திரமாக மாறி மாறிப் பேசும் பாங்கில்—mono-acting கதாகாலட்சேப முறையில் - இது அமைகிறது. உரை கூறும் அரையர் உரை சொல்லி வரும்போது, மாற்றவர் அதனைத் தம்மிடம் உள்ள ஏட்டுடன் ஒத்திட்டுப் பார்ப்பர். மனப்பாடமாக அரையர் உரை கூறி வருகையில், தடங்கல் ஏற்படின், சரிப்பார்ப்பவர் அடியெடுத்துக் கொடுப்பார் வியாக்யானம் முடிந்ததும் மீண்டும் அரையர் 'கொண்டாட்டம் கூறிட நிகழ்ச்சி முடியும்.

பகல்பத்து, இராப்பத்து நாட்களில் அரையர் தம் கலைக்கு எடுத்துக்கொள்ளும் பாசுரங்கள் காலந்தோறும் மாற்றம்பெற்று வந்துள்ளன. முன்னர் அளவில் மிகுதியாக இருந்து பின்னர் குறைந்து உள்ளது இச்செய்திகளைக் குருபரம்பரை நுல்கள், வியாக்யானங்கள் வழி அறியலாம். ஆழ்வார்திருநகரி அரையர் சேவையில் மாற்றம் ஏதுமில்லை. ஸ்ரீரங்கத்தில் பகல் பத்தில் மட்டும் அரையர் எடுத்துக் கொள்ளும் பாசுரங்கள் ஏனைய இருவிடங்களுடன் ஒருசிறிது மாறுபடுகின்றன.

*முத்துக் குறி:*

அரையர்சேவையில் பாசுரத்திற்கு மட்டுமே அபிநயம் உண்டு. ஆனால், முத்துக் குறி அன்று மட்டும் பாசுரத்துடன் உரைக்கும் அபிநயம் உண்டு. திருமாங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைப் பாடும் நிகழ்ச்சி முதத்துக் குறி. இதில் 'கட்டுவிச்சி' (குறித்து) வருவதால், அவள் செயலை வைத்து (முத்துக்களைக் கொண்டு குறி பார்ப்பது) இந்நிகழ்ச்சி முத்துக் குறி எனப்பெயர் பெற்றது. இது, பகல்பத்தில் ஒன்பதாம் நாளில் ஸ்ரீரங்கத்திலும், ஆழ்வார் திருநகரி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இருவிடங்களில் பகல் பத்தின் பத்தாம் நாளிலும் நடைபெறும். ஏனைய நாட்களைவிட, இந்நாளைய நிகழ்ச்சி நடைபெறும் காலம் நீண்டதாயிருக்கும். இப்பாசுரத்திற்கு அரையர் கூறும் உரை நீண்டது. எனவே, நிகழ்ச்சியின் காலமும் நீண்டது. ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் இந்-

நிகழ்ச்சி மூன்று பிரிவுகளாக ஆடிமாதம் (பிரம்மோத்சவத்தில் தேர் நிலைக்கு வந்த மறுநாளில்), மார்கழி மாதம் (பகல்பத்து உற்சவத்தின் இறுதிநாள் - ஒண்ணெய்க் காப்பு உற்சவத்தில்), தைமாதம் பொங்கலின் மறுநாள் கனுநாளில்) ஆகிய காலங்களில் நடைபெறும்.

*பள்ளுப் பாட்டு:*

முற்கூறியபடி பள்ளுப் பாட்டு பாடும்போது மட்டும் மிருதங்கம் இசைப்பர். இப்பள்ளுப்பாட்டு என்பது அரையர் ஒருவர் பறைச்சேரியிலே தங்கிருந்த தம்பணியை மறந்து இருக்க, இறைவன் ஆட்கொள்ள விழைந்து அவரை வரவழைத்து அவர் அங்கு பயின்ற பள்ளுப்பாட்டைப் பறை இசையுடன் கேட்டான். அன்றுமுதல் பறை ஒலியுடன் பள்ளுப்பாட்டு பாடும் பழக்கமும் அரையர் சேவையில் இடம்பெற்றது. இப்பள்ளுப் பாட்டுக்கள் இன்றும் மூன்று கோயில்களிலும் திருமுடிசேவை, படியேற்றசேவை, திருவூறல் உற்சவம் ஆகிய விழாக்காலங்களில் அரையரால் மிருதங்க இசையுடன் பாடப்படுகின்றன. இப்பாடல்கள் எளிய சொற்களில் இறைவன் புகழ் பாடுபவை. கவிக்கூற்று முறையிலும், அகப்பொருள் அமைப்பில் தலைவி கூற்றிலும் அமைந்த பாடல்கள் இவை. இப்பள்ளுப்பாட்டிற்கும் தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான பள்ளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. பள்ளர், பறையர் என்று கூறப்பட்டுக் கோயிலுக்குள் புகுவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட மக்களின் பாடல்களை அவர்களின் இசையில், கேட்க இறைவன் விரும்பினான் என்பதன் வழி, வைணவ சமயத்தில் இறைவன் முன் அனைவரும் ஒன்று என வலியுறுத்தினர். இக்கலை இவவாறு, எளிய நாட்டுப்புறக் கலைக்கூறுகளையும் அப்படியே தன்னுள் இணைத்துக்கொண்டது. ஆனால் நாளடைவில் நாட்டுப்புற இசைக்கருவியான பறை மிருதங்கமாக மாறியது.

*பயிற்சி:*

இக்கலைக்கு வருவதற்குமுன் 12 முதல் 18 ஆண்டுகள் அரையர் பயிற்சி பெறுகின்றனர். தந்தையிடம் பிள்ளை பயிற்சிபெற, அதேமுறையில் மரபுவழி இக்கலை வளர்கிறது. நாலாயிரம் பாடல்கள், அவற்றில் வியாக்யானம், கொண்டாட்டம், பள்ளுப்பாடல்கள் ஆகியவற்றை மனனம் செய்வது, இசை பயில்வது, அபிநயம் செய்வது

என்பன பயிற்சியிலடங்கும். பயிற்சியின்போதே, தந்தையுடன் இணைந்து பிள்ளை (பயிற்சியாளர்) நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். ஆண்பிள்ளை வாரிசு இல்லாதபோது, வேறு ஒரு ஏற்ற ஆண்பிள்-ளையைத் தத்தெடுத்து இக்கலையைப் பயிற்றுவிப்பர். பெணகள் இக்கலை பயில அனுமதிக்கப்படுவதில்லை.

இசையும் ஆடலும் :

நாதமுனிகள் நேரடியாக நம்மாழ்வாரிடமிருந்து நாலாயிரம் பாடல்களைப் பெற்று, இக்கலையைத் தோற்றுவித்தார் என்பதால் அரையர் பாடும் இசையே ஆழ்வார் பாசுரங்களுக்குரிய தொன்மை யான இசை எனலாம். இன்று நடைமுறையில் அரையர் இசை என்ற மூன்று வித இசைப்பாங்கு ஆழ்வார் பாசுரங்களுக்கு உள்ளது. எனவே அரையரின் பண்களை ஆராய்ந்து தொன்மையான இசைக் கூறை அறியவேண்டும். அரையரின் அபிநயம் பரதநாட்டிய சாத்தி-ரத்துடன் தொடர்புடையது என்பதால் அதனை ஆய்தல் வேண்டும். பாற்கடல் கடைந்த வருணனை வரும் திருநெடுந்தாண்டக நிகழ்ச்சி (முத்துக் குறி அன்று இடம்பெறும்) அமிர்த மதனம் எனப்படும். இந்நிகழ்ச்சியைப் பரதரின் நாட்டிய சாத்திரமும் அமிர்த மதனம் என்றே குறிப்பிடுவது அறியத்தக்கது.

ஆழ்வார் திருநகரியில் அரையர் ஒருவரே உள்ளார். அவருடன் அவரது மைந்தரும் தற்போது பங்கு பெற்று வருகிறார். ஸ்ரீவில்லிபுத்-தூர் ஸ்ரீரங்கம் ஆகிய இருவிடங்களிலும் இரு அரையர் குடும்பங்கள் உள்ளன. இவ்விரு குடும்பங்களும் தம்முள் முறை வைத்துக்கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள், உற்சவ காலங்களில் நிகழ்ச்சியில் பங்கேற்பர். அரையர், ஆண்டு முழுவதும் ஆலயத்தில் தினந்தோறும் வழிபாட்டுக் காலங்களில் பிற்பகலில் திவ்வியப் பிரபந்தம் பாடும் பணி செய்வார் ஸ்ரீரங்கத்தில் மட்டும், பகல்பத்து உற்சவத்தில பிற்பகலில் கம்சவதை, வாமனவதாரம், பாற்கடல் கடைதல், இராவண வதை ஆகிய அவதார-புராணக்கதை நிகழ்ச்சிகள் ஓரங்க நாடகங்களாக முறையே நான்கு, ஏழு, எட்டு, பத்து நாட்களில் அரையரால் நடிக்கப்பெறும் வழக்கம் உள்ளது.

*அரையர் பணி :*

அரையர் வெறும் கலைஞர் மட்டுமல்லர். இராமானுஜருக்கு ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர் என்பார் பஞ்ச ஸமஸ்காரம் செய்து சரமோபாயம் உபதேசித்தார். நஞ்சீயர் என்ற ஆசாரியாருக்குப் பிள்ளைத் திருநறையூர் அரையர், திருவாய் மொழியின் உட்பொருளை விளக்கினார். நஞ்சீயருக்குத் நோய் தீர்க்கும் மருந்தாக அரையரின் இசை இருந்ததை தமது பெரியவாச்சான்பிள்ளை உரையில் குறிப்பிடுகிறார்.

அரையர் சேவை நிகழும்போது, பார்வையாளர் செய்து காட்டிய அபிநயத் திருத்தம் பற்றி உரைகளில் இடம்பெறுகிறது. இவ்வாறு வருமிடங்கள் இரண்டில் என்பார் அபிநயத்திருத்தம் செய்ய, ஓரிடத்தில் இராமானுஜர் அபிநயஞ்செய்து காட்டுகிறார். இவற்றால், பாசுரத்தின் உட்பொருளை - தத்துவ விளக்கத்தை-உணர்ந்து கொண்ட பார்வையாளர், அரையரின் அபிநயம் சரியானபடி அமையவில்லை என்ற ரசனை அடிப்படையில் தாம் நிகழ்ச்சியில் பங்குபெற்றுச் சரியான முறையில் அபிநயித்தார் என அறியலாம்.

*முடிவுரை:*

'அரையர் சேவை' என்னும் கலை, இயல், இசை, கூத்து என்னும் முத்திறன்களையும் தன்னுள் அடக்கியது. வைணவ சமயத் தத்துவக் கருத்துக்களை எளிய முறையில் மக்கள் அறிந்துகொள்வதற்காக இசையும் கூத்துமாக அது பரப்பப்பட்டது. உலக வாழ்க்கையில் ஈடுபட்ட மக்கள், சமய நெறி உணராமல் இருப்பதை அறிந்து அவர்களை ஈர்க்க இவ்வாறு இசையும் கூத்துமாகப் பரப்பப்பட்டது. முத்துக் குறியில் குறத்தின் கூறுகளையும் பள்ளுப்பாட்டில் பறை இசை, பள்ளுப் பாடல் ஆகியவற்றையும் தன்னுள் ஏற்று மககள் கலையாக அரையர்சேவை வளர்ந்தது. இராமானுஜருக்கு முன், அரையரே நாலாயிரப் முழுவதையும் பாடி வந்துள்ளார். இராமானுஜர் காலத்தில் தான் இயற்பா தவிர, இசையுடைய மூவாயிரம் அரையராலும் இயற்பா, திருவரங்கத்தமுதனார் மரபினராலும் பாடும் முறை வந்தது அதே போல, முதலில் அரையர் பாடித் தொடங்கி வைக்க, பின்னர் ஸ்ரீவைஷ்ணவர்கள் குழுப்பாடலாகப் (கோஷ்டி சேவை) பாடித் தொடர மீண்டும் அரையர் பாடி முடித்து வைக்கும் வழக்கமும் இராமானுஜரால் அமைக்கப்பெற்றது. இக்கலையின் வளர்ச்சி இவ்வாறு பாரம்பரியாக அமைந்து வந்துள்ளது.

மணியம் பிரஸ், மதுரை-9